This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## சுராவின்

# வணிகவியல்

## மேல்நிலை – முதலாம் ஆண்டு

### சிறப்பம்சங்கள் :

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் ***[Govt. MQP-2018]***, முதல் பருவ இடைத்தேர்வு ***[First Mid-2018]***, காலாண்டுத் தேர்வு ***[QY-2018, 2019]***, அரையாண்டுத் தேர்வு ***[HY-2018, 2019]***, மார்ச் பொதுத் தேர்வு ***[Mar-2019, Mar-2020]***, ஜுன் உடனடித் தேர்வு ***[June-2019]***, அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 ***[Sep-2020]*** மற்றும் பொதுத்தேர்வுக்கான முக்கிய வினாக்கள் ***[BEQ]*** ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 வினாத்தாள் விடைகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

***2021-22*** புதிய பதிப்பு

© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-93-88023-16-0**
**குறியீட்டு எண் : SG 213**

*எழுதி வழங்கியவர்*
**திரு. பூமிநாதன்** M.Com., B.Ed., M.Phil.

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040.
☎ 044-4862 9977, 044-486 27755.
**e-mail :** enquiry@surabooks.com
**website :** www.surabooks.com

Our Guides for XI Standard

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

# பதிப்பாசிரியர் உரை

**11**ம் வகுப்பிற்கான சுராவின் **வணிகவியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். வணிகவியல் பாடங்களுக்கான வினா விடைகள் / பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் வணிகவியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

நமது சுராவின் வணிகவியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், வணிகவியல் மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

- பதிப்பகத்தார்.

***வாழ்த்துக்கள் !!!***

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 9600175757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்


| அலகு | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | **அத்தியாயம் 1** - இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி | 1-5 |
| | **அத்தியாயம் 2** - தொழிலின் நோக்கங்கள் | 6-10 |
| | **அத்தியாயம் 3** - தொழில் நடவடிக்கைகளின் வகைகள் | 11-15 |
| 2. | **அத்தியாயம் 4** - தனியாள் வணிகம் | 16-20 |
| | **அத்தியாயம் 5** - இந்து கூட்டுக்குடும்பம் மற்றும் கூட்டாண்மை | 21-27 |
| | **அத்தியாயம் 6** - கூட்டுப் பங்கு நிறுமம் | 28-31 |
| | **அத்தியாயம் 7** - கூட்டுறவு அமைப்பு | 32-36 |
| | **அத்தியாயம் 8** - பன்னாட்டு நிறுமங்கள் (MNC) | 37-40 |
| | **அத்தியாயம் 9** - அரசு அமைப்புகள் | 41-46 |
| 3. | **அத்தியாயம் 10** - இந்திய ரிசர்வ் வங்கி | 47-51 |
| | **அத்தியாயம் 11** - வங்கிகளின் வகைகள் | 52-55 |
| | **அத்தியாயம் 12** - வணிக வங்கிகளின் பணிகள் | 56-61 |
| | **அத்தியாயம் 13** - பண்டகக் காப்பு | 62-66 |
| | **அத்தியாயம் 14** - போக்குவரத்து | 67-71 |
| | **அத்தியாயம் 15** - காப்பீடு | 72-76 |
| 4. | **அத்தியாயம் 16** - இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள் | 77-83 |
| 5. | **அத்தியாயம் 17** - தொழிலின் சமூக பொறுப்புணர்வுகள் | 84-89 |
| | **அத்தியாயம் 18** - தொழில் நன்நெறிகள் மற்றும் நிறுவன ஆளுகை | 90-94 |
| 6. | **அத்தியாயம் 19** - தொழில் நிதிமூலங்கள் | 95-102 |
| | **அத்தியாயம் 20** - பன்னாட்டு நிதி | 103-107 |
| | **அத்தியாயம் 21** - குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் | 108-113 |
| 7. | **அத்தியாயம் 22** - வியாபாரத்தின் வகைகள் | 114-117 |
| | **அத்தியாயம் 23** - வழங்கல் வழிகள் | 118-123 |
| | **அத்தியாயம் 24** - சில்லறை வியாபாரம் செய்தல் | 124-130 |
| 8. | **அத்தியாயம் 25** - பன்னாட்டு வணிகம் | 131-136 |
| | **அத்தியாயம் 26** - ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் | 137-145 |
| | **அத்தியாயம் 27** - பன்னாட்டு வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் | 146-152 |
| | **அத்தியாயம் 28** - செலுத்தல் சமநிலை மற்றும் வாணிபச் சமநிலை | 153-156 |
| 9. | **அத்தியாயம் 29** - ஒப்பந்தத்தின் கூறுகள் | 157-161 |
| | **அத்தியாயம் 30** - ஒப்பந்த நிறைவேற்றம் | 162-165 |
| | **அத்தியாயம் 31** - ஒப்பந்த விடுவிப்பு மற்றும் ஒப்பந்த மீறுகை | 166-169 |
| 10. | **அத்தியாயம் 32** - நேர்முக வரிகள் | 170-173 |
| | **அத்தியாயம் 33** - மறைமுக வரிகள் | 174-180 |
| | **அரசு துணைத்தேர்வு செப்டம்பர் 2020 வினாத்தாள் சேர்க்கப்பட்டுள்ளன.** | 181-188 |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 1 தொழிலின் அடிப்படைக் கூறுகள்

# அத்தியாயம் 1 இந்தியத் துணைக் கண்டத்தின் வாணிக வரலாற்றுப் பின்னணி

## பொருளடக்கம்

1.1. அறிமுகம்
1.2. பண்டமாற்று முறை
1.3. வணிகத் தடைகள்
1.4. தொழில் தடைகளும் அவற்றை நீக்கும் வழிகளும்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு _______ என்று பெயர்** *[QY-2019; HY-2019]*

அ. அங்காடி ஆ. சந்தை
இ. நாளங்காடி ஈ. அல்லங்காடி

**[விடை. (அ) அங்காடி]**

**2. இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.** *[BEQ; QY-2018; June-2019; Sep-2020]*

அ. போக்குவரத்து ஆ. பண்டகசாலை
இ. விற்பனையாளர் ஈ. காப்பீடு

**[விடை. (அ) போக்குவரத்து]**

**3. அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

அ. கௌடில்யர் ஆ. வால்மிகி
இ. திருவள்ளுவர் ஈ. இளங்கோவடிகள்

**[விடை. (அ) கௌடில்யர்]**

**4. வியாபாரம் மற்றும் வணிகம் _______ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.** *[BEQ; First Mid-2018; QY-2018]*

அ. பல்லவர் ஆ. சோழர்
இ. பாண்டியர் ஈ. சேரர்

**[விடை. (இ) பாண்டியர்]**

**5. _______ முதன்முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.**

அ. பால்பன் ஆ. வாஸ்கோடகாமா
இ. அக்பர் ஈ. அலாவுதின் கில்ஜி

**[விடை. (அ) பால்பன்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. பண்டமாற்றுமுறை என்றால் என்ன?** *[BEQ; HY-2018; June-2019; Mar-2020]*

**விடை :** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. நாளங்காடி என்றால் என்ன?** *[BEQ; First Mid-2018; QY-2018, 2019; Mar-2019; Sep-2020]*

**விடை :** (i) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது.

(ii) அப்பொருள்களின் விற்பனை, **பகலில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது.

**3. அல்லங்காடி என்றால் என்ன?**

**விடை :** (i) பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது.

(ii) அப்பொருள்களின் விற்பனை, **இரவில் நடந்ததை** நாளங்காடி என அழைக்கப்பட்டது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. வணிகம் பொருள் தருக.**

**விடை :** (i) **பண்டங்கள் மற்றும் பணிகள் பரிமாற்றம்** செய்யும் ஓர் ஒழுங்கு முறை அமைப்பு வணிகம் என்றழைக்கப்படுகிறது.

(ii) பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு, பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

(iii) உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் வணிகம் முக்கியப் பங்காற்றுகிறது.

**2. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் - விளக்குக.**

**மருவூர்ப்பாக்கம் :**

**விடை :** (i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) என அழைக்கப்பட்டன. உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

(ii) **எ.கா. :** தொண்டி, கொற்கை, பூம்புகார், முசிறி ஆகும்.

**பட்டினப்பாக்கம் :**

(i) பட்டினப்பாக்கம் என்பது **கடலோர நகரம்** ஆகும்.

(ii) எ.கா. முத்துக்கள், பவளங்கள், மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் இடம் பெற்றுள்ளன.

**3. பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்க காலத்தின் பங்கு என்ன?** *[BEQ; First Mid-2018; QY-2018]*

**விடை :** (i) சங்க காலத்தில் உள்நாட்டு வியாபாரமும், வெளிநாட்டு வியாபாரமும் பண்டமாற்று முறையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

(ii) இடைக்காலத்தில் வியாபாரம் பல்வேறு பகுதிகளை இணைக்க வழிவகை செய்தது.

(iii) மலைவாழ் மக்கள் தேன், பழங்கள் மற்றும் கிழங்குகளையும். நிலம் (தரை) வாழ் மக்கள், கால்நடைகள், பால் மற்றும் பால் பொருட்களையும் பண்டமாற்று செய்தனர்.

(iv) உள்நாட்டு வியாபாரத்தில் உப்பு மாற்றுப் பொருளாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(v) சிலகாலம் நெல் பண்டமாற்றுப் பொருளாக விளங்கியுள்ளது.

(vi) வியாபாரத்தில் ஒருவர் மற்றொருவரையும் சார்ந்து இருந்துள்ளனர்.

**4. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?** *[HY-2018]*

**விடை :** பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம், குமரி ஆகிய இடங்கள் ஆகும்.

**5. செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது?**

**விடை :** (i) சாணக்கியர் (கௌடில்யர்) இன் அர்த்த சாஸ்திரத்தில் வட இந்திய மௌரியக் காலப் பொருளாதார நிலையை விவரிக்கிறது.

(ii) இதன் வாயிலாக 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சந்தையின் வரலாற்றினை அறிந்து கொள்ளமுடிகிறது.

(iii) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அரசு குறிப்பிடும் ஓரிடத்தில் (மையப்படுத்துதல்) விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு முறையான வரிகள் செலுத்தப்பட்ட பிறகு விற்பனை செய்யப்படும்.

(iv) கருவூலம், வரிவிதிப்பு, தொழிற்சாலைகள், வணிகம், விவசாயம் மற்றும் இயற்கை வளங்களின் மூலம் செல்வத்தை உருவாக்கி அரசு நலன், மக்கள் நலன் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவது முக்கியம் என அறிவுறுத்தியுள்ளார்.

## IV. பெருவிடை வினாக்கள்

**1. வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக.**

*[BEQ; First Mid-2018; QY-2018; HY-2018; Mar-2019]*

**விடை :** (i) ஆள்சார் தடை

(ii) இடத்தடை

(iii) காலத்தடை

(iv) இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை

(v) நட்ட இடர்பாட்டு தடை

(vi) அறிசார் தடை

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 2 தொழில் அமைப்புகளின் வடிவங்கள்

# அத்தியாயம் 4 தனியாள் வணிகம்

## பொருளடக்கம்


4.1. தொழில் அமைப்பு
4.2. தனியாள் வணிகம்
4.3. சிறப்பியல்புகள்
4.4. தனியாள் வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும்


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?** *[BEQ; QY-2018; Mar-2019; HY-2019]*

அ. தனியாள் வணிகம்
ஆ. கூட்டாண்மை
இ. கூட்டுறவுச் சங்கம்
ஈ. நிறுமம்

**[விடை. (அ) தனியாள் வணிகம்]**

**2. எந்த அமைப்பு ஒரே ஒருவராக உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருக்கும்?**

அ. கூட்டு நிறுவனம்
ஆ. அரசு நிறுவனம்
இ. கூட்டுறவுச் சங்கம்
ஈ. தனியாள் வணிகம்

**[விடை. (ஈ) தனியாள் வணிகம்]**

**3. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு** *[QY-2019 ; Mar-2020]*

அ. வரையறு பொறுப்பு ஆ. வரையறாப் பொறுப்பு
இ. அமைப்பெளிமை ஈ. விரைவான முடிவு

**[விடை. (ஆ) வரையறாப் பொறுப்பு]**

**4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று தொழில் அமைப்பு இல்லாதது.** *[BEQ; HY-2018]*

அ. கூட்டுப்பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு

**[விடை. (இ) அரசு நிறுமம்]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?**

**விடை :** தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு, தனது சொந்த திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி, வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில், **மேலாண்மை செய்து நடத்துபவர்** தனியாள் வணிகர் ஆவார்.

**2. கூட்டுரு நிறுவனங்களைப் பற்றிச் சுருக்கமாக கூறுக.** *[Sep-2020]*

**விடை :** (i) கூட்டுவாக்கம் பெற்ற அமைப்புகள் தனக்கென்று ஒரு சட்டத்தன்மையைப் பெற்று ஒருபுனைவு நபர் என்ற முறையில் உரிமையாளர்களிடமிருந்து தனித்து ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது. இதில் உரிமையும் மேலாண்மையும் பிரிக்கப்படுகின்றன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



(iv) **சிறப்புத் தேர்ச்சியின்மை :**

1. தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில் இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது.
2. பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களையும் பணியமர்த்தப் போதிய பொருளாதார வளம் இல்லாத காரணத்தினால் அதிக நன்மைகளைப் பெற இயலாது.
3. அவர் ஒருவரே உற்பத்தி, சந்தையிடுதல், கணக்குப்பதிவியல், கடிதத் தொடர்பு போன்ற பணிகளை ஒருவரே கையாள முடியாது.

(v) **அவசர முடிவு :**

1. அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு நன்மை பயப்பதாக இருந்தாலும் சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்குச் செல்ல வழி வகுத்துவிடும்.
2. அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழிக்கு இணங்க இச்செயலும் இருக்கும்.

## அரசு தேர்வு வினாக்கள்

### 1 மதிப்பெண்

**1. கீழ்க்கண்டவற்றுள் எது கூட்டுரு-சாரா நிறுவனமாகும்?** *[BEQ; Govt. MQP-2018]*

அ. கூட்டுப் பங்கு நிறுமம் ஆ. தனியாள் வணிகம்
இ. அரசு நிறுமம் ஈ. கூட்டுறவு சங்கம்

**[விடை. (ஆ) தனியாள் வணிகம்]**

**2. பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகளில் இல்லை?** *[June-2019]*

அ. தனி நபர் உரிமை ஆ. வரையறு பொறுப்பு
இ. முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை
ஈ. இரகசியம் காத்தல்

**[விடை. (ஆ) வரையறு பொறுப்பு]**

### 2 மதிப்பெண்கள்

**1. எந்த வியாபார அமைப்பை சட்ட சடங்கு முறை ஏதும் இன்றி துவக்கலாம்? அதன் பொருளை கூறுக.**

விடை : **தனியாள் வணிகம்** *[BEQ; Govt. MQP-2018]*

**பொருள் :**

தனியாள் வணிகம் என்பது வியாபார அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தனிநபர் தன் மூலதனத்தைக் கொண்டு தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளைத் தனது சொந்தப் பொறுப்பில் மேலாண்மை செய்து பயன்பெறும் அமைப்பாகும்.

**2. ஒரு வணிக நிறுவனத்தின் சொத்துகள் ரூ. 1,00,000. ஆனால் அந்நிறுவனம் வெளியாட்களுக்கு தர வேண்டிய கடன் ரூ. 1,40,000. இதில் கூறப்பட்டுள்ளபடி அந்த பொறுப்பின் பெயர் என்ன? கடனீந்தோர் பின்வரும் நிறுவனங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?**

(I) **இது தனியாள் வணிகமாக இருந்தால்**
(II) **அது [அ] மற்றும் [ஆ] என்பவர்கள் சமமான கூட்டாளிகளாக இருந்தால்.**

*[BEQ; Govt. MQP-2018]*

விடை : (I) தனியாள் வணிகமாக இருந்தால் அது வரையறாப் பொறுப்பு.

கடனீந்தோர் எடுக்கும் நடவடிக்கை வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

(II) கூட்டாளியாக இருந்தால் வரையறுக்கப்பட்ட பொறுப்பு

### 3 மதிப்பெண்கள்

**1. சுதாகர் என்பவர் ஒரு நடுத்தர வர்க்க குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தன்னுடைய குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக ஒரு மளிகைக் கடையை தொடங்க விரும்புகிறார். உங்களுடைய கருத்துப்படி அவர் எந்த வகையான வியாபாரத்தை தொடங்கலாம்? அதனுடைய நன்மைகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.**

*[BEQ; Govt. MQP-2018]*

விடை : சுதாகர் தனியாள் வணிகத்தை தொடங்கலாம்.

**நன்மைகள் :**

(i) **எளிதான அமைப்பு**

தனியாள் வணிகம் மட்டுமே வியாபார அமைப்பு வடிவங்களில் **சட்ட சடங்குமுறை ஏதுமின்றித் துவக்கலாம்.** ஒப்பந்தம், பதிவு போன்றவை இவ்வமைப்பிற்கு அவசியமில்லையாதலால் தொழில் முனைய விருப்பமுடையவர் எவரும் இத்தொழிலைத் தொடங்கலாம்.

(ii) **கடின உழைப்பிற்கு நேரடி ஊக்குவிப்பு**

முயற்சிக்கும் வெகுமதிக்கும் நேரடியாக தொடர்பிருப்பதால் தனியாள் வணிகர் இலாபம் முழுவதற்கும் அவரே உரிமையாளர் ஆகிறார். இது அவருடைய வியாபாரத்தை ஊக்குவித்து அயராது உழைக்கச் செய்கிறது.

**2. கோவிந்த் என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தை கணக்குகளை பராமரிக்கவும், சகோதரர் மாலையில் வாடிக்கையாளர்களைப் பார்த்துக் கொள்ள உதவினர். கோவிந்த் தந்தைக்கும், சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எவ்விதமான வியாபார அமைப்பு எனக் கூறுக. மேலும் அவ்வியாபார அமைப்பின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைக் கூறுக.** *[Mar-2019]*

விடை : இது தனியாள் வணிக அமைப்பைச் சார்ந்தது.

**குறைபாடுகள் :**

(i) **அளவான முதல் :**

1. தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது. ஆகவே அவரின் வியாபார நடவடிக்கைகள் ஓர் எல்லையைத் தாண்டிச் செல்ல வாய்ப்புக் குறைவு.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



2. அவரின் **கடன் பெறும் திறனும் குறைவாகவே இருப்பதாலும்** மற்றும் அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலைத் துவக்க முடியாமையும் குறைபாடுகளாக இருக்கின்றன.

**(ii) வரையறாப் பொறுப்பு :**

1. வியாபாரத்தின் உரிமையாளரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
2. கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபரின் பொறுப்பு வரையறாப் பொறுப்பாக உள்ளது.

### 5 மதிப்பெண்கள்

**1. பாலு என்பவர் அரசு வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் தற்போது ஓய்வு ஊதியம் பெறுபவர். அவர் தன்னுடைய மகனுக்கு எந்த ஒரு சரியான வேலையும் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஏதாவது ஒரு வேலையை பார்த்து கொடுத்தாலும் அவர் அதில் நீண்ட நாள் இருப்பதில்லை. பாலுவின் நண்பரான சபாபதி வெற்றிகரமான ஒரு தொழில் நடத்தி வருகிறார். அவர் தன்னுடைய நண்பரின் மகனுக்கு தனியாள் வணிகம் ஒன்றை அமைத்துத் தருமாறு அறிவுறுத்துகிறார்.**
*[BEQ; Govt. MQP-2018]*

**(i) தனியாள் வணிகம் வரையறுக்க**

**(ii) தனியாள் வணிகத்தின் ஏதேனும் நான்கு சிறப்பியல்புகளை விளக்குக.**

**விடை : (i)** J.J.ஹே஌ன்சன் என்பவரது கூற்றுப்படி, ''தனியாள் வணிகம் என்பது வியாபார அலகின் ஒரு வகையாகும். அதில் ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும்''.

**(ii)** 1. **தனி நபர் உரிமை :** இது தனி நபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். தனியாள் வணிகர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். தனியாள் வணிகத்தில் அவர் ஒருவரே உரிமையாளராக இல்லாவிட்டாலும் அதன் அமைப்பு முழுவதையும் அவரே கட்டுப்படுத்துகிறார்.

2. **தலையீடற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு :** தனியாள் வணிகர் தனது வியாபாரத்தில் தலையீடின்றிச் செயல்படுகிறார். தனியாள் வணிகர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். தனி உரிமையாளர் உடனடியாகவும் முடிவு எடுக்கிறார்.

3. **வரையறாப் பொறுப்பு :** தனியார் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக அவரது வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளை பறிமுதல் செய்ய கடனீந்தோருக்கு உரிமை உண்டு.

4. **முழு இலாபத்தையும் அனுபவித்தல் :** அந்நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனியாள் வணிகருக்கு உண்டு. தனது கடின உழைப்பின் மூலம் ஈட்டிய இலாபத்தின் உந்துதலால் அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1. தனியார் வணிகத்தில் முடிவு எடுக்கப்படுவது**

அ. விரைவாக ஆ. தாமதமாக
இ. கலந்து ஆலோசித்து ஈ. எதுவுமில்லை

**[விடை. (அ) விரைவாக]**

**2. தனியாள் வணிகத்தில் வியாபார இரகசியங்களை ........... இயலும்.**

அ. காக்க இயலும் ஆ. காக்க இயலாது
இ. எதுவுமில்லை ஈ. அனைத்தும்

**[விடை. (அ) காக்க இயலும்]**

**3. தனியாள் வணிக்கத்தைப் பதிவு செய்ய வேண்டிய ...........**

அ. தேவையில்லை ஆ. கட்டாயமாக்கப்பட்டது
இ. விருப்பத்திற்குட்பட்டது ஈ. எதுமில்லை

**[விடை. (அ) தேவையில்லை]**

**4. நெகிழ்வுத் தன்மை உடைய வணிகம்** *[BEQ]*

அ. தனியாள் வணிகம் ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்
இ. கூட்டாண்மை ஈ. கூட்டுறவு சங்கம்

**[விடை. (அ) தனியாள் வணிகம்]**

**5. ஒரு நபர் மட்டும் முதலீடு செய்து நடத்தும் வணிகம்**

அ. கூட்டாண்மை ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்
இ. தனியாள் வணிகம் ஈ. கூட்டுறவுச் சங்கம்

**[விடை. (இ) தனியாள் வணிகம்]**

☆ ☆ ☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 3 சேவைத் தொழில்கள் I

## அத்தியாயம் 10 இந்திய ரிசர்வ் வங்கி

### பொருளடக்கம்

10.1. சேவைத் தொழிலின் தேவை
10.2. வங்கிச் சேவை
10.3. இந்திய வங்கிகள் – ஓர் வரலாற்றுப் பின்னணி
10.4. வங்கி இலக்கணம்
10.5. மைய வங்கி – இலக்கணம்
10.6. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம்
10.7. இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டமைப்பு
10.8. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்

### பயிற்சி

#### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது.** *[June-2019]*

அ. மைய வங்கி
ஆ. வணிக வங்கி
இ. கூட்டுறவு வங்கிகள்
ஈ. வெளிநாட்டு வங்கிகள் **[விடை. (அ) மைய வங்கி]**

**2. இந்திய மைய வங்கி என்பது** *[Mar-2020]*

அ. பி.என்.பி. ஆ. எஸ்.பி.ஐ.
இ. ஐ.சி.ஐ.சி.ஐ ஈ. ஆர்.பி.ஐ

**[விடை. (ஈ) ஆர்.பி.ஐ]**

**3. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, .................. ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.**

*[BEQ; QY-2018; HY-2018; Sep-2020]*

அ. 1936 ஆ. 1935 இ. 1934 ஈ. 1933

**[விடை. (ஆ) 1935]**

**4. வங்கியர்கள் பணத்தை கையாள்பவர்கள் மட்டுமல்ல ........... க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.**

அ. பொருளாதார வளர்ச்சி
ஆ. வர்த்தக வளர்ச்சி
இ. தொழில் வளர்ச்சி
ஈ. சேவை வளர்ச்சி

**[விடை. (அ) பொருளாதார வளர்ச்சி]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**5. கீழ்க்கண்டவற்றில் எது மைய வங்கியின் பணி அல்ல?**

அ. ஒரு நாட்டின் வங்கி அமைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துதல்

ஆ. பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்

இ. அரசாங்க வங்கியாளராக நடத்தல்

ஈ. மற்ற வங்கிகளின் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்

**[விடை. (ஆ) பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுதல்]**

## II. குறுவிடை வினாக்கள்

**1. சேவை தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?**

விடை : (i) கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற சேவைத் தொழில்கள் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றன.

(ii) உலக வர்த்தகத்தில் சேவைத் தொழில்கள் 1970ஆம் ஆண்டிற்குப் பின்னரே அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது.

(iii) உலகப் பொருளாதாரத்தின் மிகவும் ஆற்றல் வாய்ந்த துறையாகச் சேவைத் துறை உருவாகியுள்ளது.

**2. வங்கியின் பொருளை எழுதுக.**

விடை : 1949ஆம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, "முதலீடு செய்வதற்கோ, கடன் வழங்குவதற்கோ, கேட்ட உடன் அல்லது காசோலை, வரைவோலை அல்லது பணவிடை மற்றுமுள்ள முறைகளில் திரும்பக் கொடுப்பதற்கோ, பொதுமக்களிடமிருந்து வைப்பு தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் செயல் வங்கியியல்" எனப்படும்.

**3. மைய வங்கி பற்றிச் சுருக்கமாக விளக்குக.** *[QY-2018; HY-2018; QY-2019]*

விடை : "ஒரு நாட்டின் பண மற்றும் வங்கிக் கட்டமைப்பின் உச்சநிலையமாகவும், தேசியப் பொருளாதார நலனுக்காகவும் சிறந்த முறையில் செயல்படும் வங்கி அந்த நாட்டின் மைய வங்கி எனப்படும்", என டிகாக் அவர்கள் வரைவிலக்கணம் வகுத்துள்ளார்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. வங்கி சேவைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.** *[QY-2019]*

விடை : (i) ஒரு நாட்டின் வர்த்தகம், வாணிகம் மற்றும் **தொழில்களின் நரம்பு மண்டலமாக வங்கி கருதப்படுகிறது.**

(ii) இது நாட்டின் வழக்கமான செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுக்கான பணத்தேவைகளைச் சந்திப்பதில், முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு மைய வங்கி உள்ளது.

(iii) இது நாட்டின் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. ஒரு நாட்டின் அனைத்து வங்கிகளின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம், இந்த உச்ச வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**2. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறுக.**

விடை : (i) இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது.

(ii) 1926 ஆம் ஆண்டில் ஹில்டன் – யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் ஒரு மைய வங்கி உருவாக்கப் பரிந்துரைத்தது.

(iii) அதன் விளைவாக இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934-இல் உருவாக்கப்பட்டு இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

(iv) இந்திய ரிசர்வ் வங்கியின் ₹5 கோடி மூலதனம் ₹100 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளால் உருவாக்கப்பட்டது.

(v) அதன் தலைமை அலுவலகம், கொல்கத்தாவில் இருந்தது பின்னர் 1937ல் மும்பைக்கு மாற்றப்பட்டது.

(vi) இந்திய ரிசர்வ் வங்கி 1947வரை, பர்மா நாட்டிற்கும், ஜுன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

**3. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?** *[QY-2018]*

விடை : இந்திய ரிசர்வ் வங்கி மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இந்த வாரியத்தின் 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

அவர்கள் பற்றிய விவரம்,

(i) ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணைநிலை ஆளுநர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்.

(ii) பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குநர்கள்.

(iii) இரண்டு அரசு அதிகாரிகள்.

(iv) நான்கு இயக்குநர்கள் (வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்).

## IV. பெருவிடை வினாக்கள்

**1. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.** *[QY-2018, 2019; Mar-2020]*

விடை : (i) **தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள் :**

1. உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி.
2. இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.
3. பணவியல் உச்சநிலை அதிகாரி.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 4 சேவைத் தொழில்கள் II

## அத்தியாயம் 16 இந்தியாவில் வளர்ந்து வரும் சேவைத் தொழில்கள்

### பொருளடக்கம்


| | |
|---|---|
| 16.1. | தனி உரிமையியல் |
| 16.2. | ஏட்டுக்கடன் முகமை |
| 16.3. | பெயர்ச்சியியல் |
| 16.4. | புறத் திறனீட்டல் |
| 16.5. | மின்னணு வணிகம் |


### பயிற்சி

#### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. எந்த ஒரு தொடர்ச்சியான உறவு வணிகத்திற்கான உரிமத்தை வழங்குகிறது, பயிற்சி அளிக்கிறது. கிளை விற்பனை செய்வதை கருத்தில் கொள்வது....... என அழைக்கப்படுகிறது.**

அ. தனி உரிமையியல் ஆ. ஏட்டுக்கடன் முகமை
இ. அளிப்புத் தொடர் மேலாண்மை
ஈ. பரிமாற்றம் **[விடை. (அ) தனி உரிமையியல்]**

**2. பணியமர்த்தல், கடன் சேகரிப்பு, ஆலோசனை போன்ற முழுமையான சேவைகள் வழங்குவதற்கு ஒப்புக்கொடுக்கும் ஒரு நிபந்தனை................. என்று அழைக்கப்படுகிறது.**

அ. முதிர்வு ஏட்டுக்கடன் தரகு வணிகம்
ஆ. தேசிய ஏட்டுக்கடன் தரகு வணிகம்
இ. அனைத்து சேவை ஏட்டுக்கடன் தரகு வணிகம்
ஈ. துணை நாடாத ஏட்டுக்கடன் தரகு வணிகம்

**[விடை. (இ) அனைத்து சேவை ஏட்டுக்கடன் தரகு வணிகம்]**

**3. மின்னனு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல்............ என அழைக்கப்படுகிறது.**

*[BEQ; Mar-2019; Sep-2020; Mar-2020]*

அ. மின்னணு வணிகம் ஆ. இணையதளம்
இ. வலைதளம் ஈ. வர்த்தகம்

**[விடை. (அ) மின்னணு வணிகம்]**

**4. உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் செயலுக்கு..............என பெயர்.**

அ. போக்குவரத்து ஆ. பெயர்ச்சியியல்
இ. வழங்கல் முறை ஈ. சந்தையியல்

**[விடை. (அ) போக்குவரத்து]**

**5. பெயர்ச்சியியலில் அரசாங்கம் தன் ஆதிக்கத்தை எதன் வழியாக செயலாக்குகிறது?**

அ. சட்டங்கள் வழியாக
ஆ. செலவுகளை குறைத்தல்
இ. போக்குவரத்து வழியாக
ஈ. பகிர்ந்தளித்தல் வழியாக

**[விடை. (ஈ) பகிர்ந்தளித்தல் வழியாக]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



| | |
|---|---|
| 4. குறைவான சவால்களைச் சந்திக்கிறது. | அதிகமான சவால்களைச் சந்திக்கிறது. |
| 5. பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு அடைதல். | முக்கிய செயல்பாடுகளில் சிறப்பு கவனம் செலுத்துதல். |
| 6. (எ.கா.) விளம்பரம் வடிவமைத்தல், கணக்கேடுகளைப் பராமரித்தல். | (எ.கா.) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மருத்துவச் சேவைகள், கற்றல் வழிமுறைகள். |

**5. மின்னணு வணிக மாதிரிகள் பற்றிக் குறிப்பு வரைக.** *[QY 2019]*

விடை : (i) **தொழில் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையேயான வணிகம் (B2C) :** இம்முறையில் தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நேரடியாகப் பொருளை விற்கின்றது.

(ii) **தொழில் நிறுவனங்களுக்கு இடையேயான வணிகம் (B2B) :** வியாபார நிறுமங்கள் தங்களுக்கிடையேயான பொருள் வாங்கல் விற்றல்களை மின்னணு வர்த்தகத்தின் மூலம் செய்து கொள்ளுவது இம்முறையில் அடங்கும் **(எ.கா.)** ப்ளிப்கார்ட், ஸ்னாப்டீல், அலிபாபா இன்டாமார்ட், டிரேட் இந்தியா.காம் போன்றவை.

(iii) **நுகர்வோர்களுக்கு இடையேயான வணிகம் (C2C) :** இம்முறையில் கைபேசி மூலமாகவோ, இணையதள விளம்பரத்தைப் பார்த்தோ, மின்னணு ஏலமுறையிலோ அல்லது ஒரு இடத்தில் இருக்கும் வாடிக்கையாளருக்கோ பொருள்களை விற்க முடியும்.

**(எ.கா)** இந்தியன் வென்ட்சர்ஸ் என்னும் கிராப்ட்லி அப்பிளிகேசன் (பொருளை விற்பது வாங்குவது) மூலம் கையால் தயாரிக்கப்பட்ட பொருட்களைப் பரந்த அளவில் பரிமாற பயன்படுத்தப்படுகிறது.

(iv) **வாடிக்கையாளருக்கும் தொழில் நிறுவனத்திற்கும் இடையேயான வணிகம் (C2B) :** தானியங்கிகள், மின்னணு பொருட்கள், அறைகலன் மற்றும் இதர பொருட்கள் இணையதளம் மூலமாக வாடிக்கையாளரால், தேவைப்படும் தொழில்களுக்கு விற்கப்படுவது இம்முறையில் அடங்கும். (எ.கா.) நாக்ரி டாட் காம் மற்றும் மான்ஸ்டர் டாட் காம் போன்றவை இந்திய நிறுமங்களால் நடத்தப்படும் மாதிரிகளாகும்.

(v) **தொழிற் நிறுவனத்திற்கும் அரசுக்கும் இடையேயான வணிகம் (B2G) :** பொருள் மற்றும் சேவைகள் அரசுத்துறைக்கு தொழில் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கின்றனர். **(எ.கா.)** டி.சி. எஸ் நிறுமம் கடவுச் சீட்டு உரிம விண்ணப்ப நடைமுறையினை வெளிநாட்டு உரிமம் வழங்கிட இந்திய அரசுக்காக தன்னுடைய மென்பொருள் மூலம் பணியை முடித்து வழங்குகிறது.

# அரசு தேர்வு வினாக்கள்

## 5 மதிப்பெண்கள்

**1. “தொழில் செயல்முறை புறத்திறனீட்டல்” என்ற தலைப்பில் கீழ்கண்டவற்றை விவரிக்க.** *[BEQ; Govt. MQP-2018]*

(i) **அதன் பொருள்**

(ii) **முதன்மை நடவடிக்கை**

(iii) **ஏதேனும் மூன்று நன்மைகள்**

விடை : (i) **பொருள்**

வெளி நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை (அ) செயல்களை பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் என்று பெயர். வாடிக்கையாளர்கள் சேவை மையம் மற்றும் புள்ளிவிவரங்களை கணினிமயமாக்குதல் போன்ற செயல்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

(ii) **முதன்மை மற்றும் இணைச் செயல்பாடுகள்**

நிறுவனங்கள் தங்களின் இணைச் செயல்பாடுகளில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் முதன்மைச் செயல்பாடுகள் நிறைவடைவதில் கவனம் செலுத்தினால் மட்டுமே நீண்ட காலத்தில் நன்மைகளையும் மற்றும் ஆதாயங்களையும் அடைய முடியும். முதன்மை செயல்பாடுகள் என்பது அனுபவம், நிபுணத்துவம், செயல்திறன் மற்றும் நிபுணத்துவ துறையில் முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கியது. எனவே இணைச் செயல்பாடுகள் பொருத்தமட்டில் வெளிநபர்களில் யார் சிறப்பாக செய்கிறார்கள் என்று ஆராய்ந்து அறிந்து அவர்களிடம் அச்செயல்களை புற ஒப்படைப்புச் செய்வதன் மூலம் வர்த்தக ரீதியான வெற்றியை தற்போதைய வணிக சூழலில் தக்க வைத்துக் கொள்ளலாம்.

**நன்மைகள்**

**1. முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது**

இதர இணை நடவடிக்கைகளை வெளி நிறுவனங்களிடம் புற ஒப்படைப்புச் செய்வதன் காரணமாக, நிறுவனங்கள் தங்களிடம் உள்ள சில தனித்துவமான திறனை செவ்வனே பயன்படுத்தி முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் நோக்கங்கள் அடைய இது உதவுகிறது.

**2. பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிக்கிறது**

புற ஒப்படைப்புச் செய்வதனால், தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். வேலைவாய்ப்புகளை உருவாக்கி ஊக்கம் அளிக்கிறது. ஏற்றுமதியை விரிவாக்கம் செய்கிறது. பொருளாதாரத்தின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு உதவுகிறது.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



3. **வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கிறது**

நிறுவனங்கள் தங்களின் இணை நடவடிக்கைகளை வெளிநபர்களுக்குப் புற ஒப்படைப்பு மூலம் தொடர் வாய்ப்பு அளிப்பதனால், சிறு வாணிப நிறுவனங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்கின்றன. இது புதிய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான வழியாக அமைவதுடன் அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கு வழிவகுக்கிறது.

**2. மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் ஏதேனும் 5 எழுதுக.** *[HY-2019]*

விடை : **மின்னணு வணிகத்தினால் வாங்குபவர்களுக்கு ஏற்படும் நன்மைகள்:**

(i) உலகத்தின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருள்களைப் பற்றி வாங்குபவர்கள் மின்னணு வணிகத்தில் அறிய முடிகிறது.

(ii) பொருளை எப்போது வேண்டுமானாலும் வாங்கும் வாய்ப்பை மின்னணு வணிகம் வழங்குகிறது. மின்னணு வணிகத்திற்கு நேரம் காலம் ஏதும் பொருந்துவதில்லை.

(iii) பொருள்களை இயல்பாக கடைகளில் சென்று வாங்குவதைக் காட்டிலும் மின்னணு வர்த்தக முறையில் வாங்கும் பொருளின் விலை குறைவாக கிடைப்பதாக கூறப்படுகிறது. காரணம் மின்னணு வணிகர்கள் மின்னணு மூலமாக வாங்கும் பொருள்களுக்கு ஏராளமான விலை சலுகைகளை வழங்குகின்றனர். இடைநிலையர்கள் இல்லாமல் நேரடியாக பொருள்களை விற்பனை செய்ய முடிவதால் பொருளின் விலையையும் குறைக்க இம்முறை சாத்தியமாகிறது.

(iv) மின்னணு மூலமாக புத்தகம் வாங்குதல், மென் பொருட்கள் வாங்குதல் என்பது கண் இமைக்கும் நேரத்தில் சாத்தியம். அதாவது உடனடியாக புத்தகம், மென் பொருள் மற்றும் பயன்பாட்டு மென் பொருள் இவைகளை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும்.

(v) வாடிக்கையாளர்கள் மின்னணு மூலம் நடத்தப்படும் ஏலத்தில் எளிதாக பங்கு பெற முடிகிறது. மின்னணு ஏலத்தில் வெளிப்படைத் தன்மை அதிகம்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1. தனி உரிமை வழங்குபவர்கள் _______ ஐக் கட்டணமாக பெறுகின்றனர்.**

அ. தரகு ஆ. சம்பளம்
இ. உரிமைத் தொகை ஈ. கழிவு

**[விடை. (இ) உரிமைத் தொகை]**

**2. உரிமைப்பேராள் சரக்குப்பட்டியலின் மதிப்பில் _______ % குறுகிய காலக் கடனை தமது வாடிக்கையாளருக்கு அளிக்கின்றார்.** *[BEQ]*

அ. 60% ஆ. 80% இ. 40% ஈ. 20%

**[விடை. (ஆ) 80%]**

**3. ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே _______ எனப்படுகிறது.** *[BEQ]*

அ. பெயர்ச்சியியல்
ஆ. தீர்மானித்தல்
இ. மேலாண்மை
ஈ. இவற்றில் எதுவுமில்லை

**[விடை. (அ) பெயர்ச்சியியல்]**

**4. சேவை சார்புடைய துறைகளில் தற்போது _______ முறை பெருகி வருகிறது.**

அ. பெயர்ச்சியியல்
ஆ. புறத்திறனீட்டல்
இ. வழங்கல் வழி
ஈ. இவற்றில் எதுவுமில்லை

**[விடை. (ஆ) புறத்திறனீட்டல்]**

**5. டெல்லாய்ட்டி சங்கத்தின் 2015ஆம் ஆண்டின் அறிக்கையின்படி இணைய தளத்தின் மூலம் நடைபெறும் சில்லறை வணிகம் இந்தியாவின் மொத்த வருவாயில் _______ விழுக்காட்டிற்கு பங்களிக்கிறது.**

அ. 10 ஆ. 15 இ. 20 ஈ. 25

**[விடை. (இ) 20]**

**6. _______ முறையில் தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளருக்கு நேரடியாகப் பொருளை விற்கின்றது.**

அ. C2B ஆ. B2B இ. B2G ஈ. B2C

**[விடை. (ஈ) B2C]**

☆☆☆



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 6 தொழில் நிதியியல்

## அத்தியாயம் 19 தொழில் நிதிமூலங்கள்

### பொருளடக்கம்


19.1. தொழில் நிதி – பொருள்

19.2. தொழில் நிதி – இயல்புகள் மற்றும் முக்கியத்துவம்

19.3. தொழில் நிதி ஆதாரங்களின் வகைகள்

19.4. தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகள்

19.5. சேமிப்பு – சேமிப்பின் முக்கியத்துவம்

19.6. தனிநபர் முதலீட்டு வழிகள்


### பயிற்சி

#### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. நிறுவனங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் பணத்தை ஒதுக்கீடு செய்தல் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.**

அ. நிதி மேலாண்மை   ஆ. வங்கி

இ. பண மேலாண்மை   ஈ. இவற்றில் ஏதுமில்லை

**[விடை. (அ) நிதி மேலாண்மை]**

**2. உட்புற நிதி மூலத்திற்கு எடுத்துக்காட்டு.......**

அ. கடனாளிகளிடமிருந்து பெறப்படும் தொகை

ஆ. வணிக வங்கி கடன்

இ. பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படும் தொகை

ஈ. தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி

**[விடை. (ஈ) தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி]**

**3. கடன்பத்திரதாரர்கள் ஒரு நிலையான .............. விகிதம் பெறத்தகுதியுடையவர்கள்.**

*[BEQ; HY-2018, 2019; Mar-2019; Sep-2020]*

அ. பங்காதாயம்

ஆ. இலாபம்

இ. வட்டி

ஈ. இவை எதுவும் இல்லை   **[விடை. (இ) வட்டி]**

**4. பொது வைப்பு............... இடமிருந்து நேரடியாகத் திரட்டப்பட்ட வைப்புத் தொகையாகும்.**

அ. பொதுமக்கள்

ஆ. இயக்குநர்கள்

இ. தணிக்கையாளர்கள்

ஈ. உரிமையாளர்கள்   **[விடை. (அ) பொதுமக்கள்]**

**5. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் .........**

அ. கடனீந்தோர்   ஆ. உரிமையாளர்கள்

இ. கடனாளிகள்   ஈ. இவை எதுவும் இல்லை

**[விடை. (ஆ) உரிமையாளர்கள்]**



orders@surabooks.com   Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**6. நடப்புச் சொத்துக்களை வாங்குவதற்குத் தேவையான நிதிக்கான ஒரு உதாரணம்.** *[BEQ]*

அ. நிலைமுதல்

ஆ. இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்

இ. நடைமுறை முதல்

ஈ. குத்தகை நிதி **[விடை. (இ) நடைமுறை முதல்]**

**7. ............. வைத்திருப்பவருக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.** *[Mar-2020]*

அ. கடனீட்டுப்பத்திரம்

ஆ. முன்னுரிமைப் பங்குகள்

இ. நேர்மைப் பங்குகள்

ஈ. பத்திரங்கள் **[விடை. (இ) நேர்மைப் பங்குகள்]**

**8. நிலைச்சொத்துக்களை வாங்க ............. ஐ பயன்படுத்துவது சிறந்த தேர்வாக இருக்கும்.**

அ. கடனீந்தோர்

ஆ. நீண்ட காலக் கடன்கள்

இ. வங்கி மேல்வரைப்பற்று

ஈ. உண்டியலை வட்டம் செய்தல்

**[விடை. (ஆ) நீண்ட காலக் கடன்கள்]**

## II. குறுவிடை வினாக்கள்

**1. கடன் பத்திரங்கள் பற்றிக் குறிப்பு வரைக.**

விடை : (i) கடன் பத்திரம் என்பது நிறுமத்தின் மூலம் திரட்டப்பட்ட கடன்கள் குறித்த வெளிப்படையான அத்தாட்சியாகும்.

(ii) கடன் பத்திரங்கள் நிறுமத்திற்கு தேவையான நீண்ட கால முதலைத் திரட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

(iii) கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் கடன் பத்திரதாரர் என்று அழைக்கப்படுகிறார்.

(iv) நிறுமம் இலாபம் ஈட்டினாலும் அல்லது நட்டம் ஏற்பட்டாலும் கடன் பத்திரதாரர்களுக்குக் கண்டிப்பாக வட்டி வழங்கப்பட வேண்டும்.

**2. பொது வைப்பு என்றால் என்ன?** *[BEQ; HY-2018; Sep-2020]*

விடை : (i) பொதுமக்கள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் தங்கள் சேமிப்பை வைப்புத் தொகையாக முதலீடு செய்வதற்கு பொது வைப்பு என்று பெயர்.

(ii) நிறுமத்தின் நிலைவைப்பில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் எந்தவிதச் சடங்குகளையும் பின்பற்றாமல், இதற்கென வழங்கப்படுகின்ற படிவங்களில் கேட்கப்படும் சிறு விவரங்களைப் பூர்த்தி செய்து அளிப்பதன் மூலமாக எளிய முறையில் முதலீடு செய்ய முடியும்.

**3. கடனாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் வரும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.** *[BEQ]*

விடை : கடனாகப் பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளைக் குறிக்கிறது. (எ.கா)

(i) கடன் பத்திரங்கள்

(ii) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன்.

(iii) பொது வைப்பு

(iv) குத்தகை நிதி

(v) வணிகத்தாள்.

**4. உட்புற நிதி மூலங்களின் கீழ் வகைப்படுத்தப்படும் ஏதேனும் இரண்டு நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுக.**

விடை : **உட்புற நிதி மூலங்கள் :**

(i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்.

(ii) பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள்.

(iii) கடனாளிகளிடமிருந்து பெற வேண்டிய தொகை.

(iv) பழைய சொத்துகளை விற்பதன் மூலம் கிடைக்கும் ஆதாயம்.

**5. தொழில் நிதிமூலங்களைத் தேர்ந்தெடுப்பதை வரையறுக்கும் காரணிகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.**

விடை : (i) **நிதி திரட்டும் செலவு :**

தொழில் நிறுவனங்கள் நிதி திரட்டுவதற்கு முன்பாக அதனைத் திரட்ட ஆகும் செலவுகளை ஆய்வு செய்ய வேண்டும்.

(ii) **நிறுவனத்தின் நிதித் திறன் :**

நிதிநிலையில் வலுவாக உள்ள நிறுவனங்கள், உடனடியாக வட்டி செலுத்தவும் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்குள் மூலதனத்தைத் திரும்பப் பெறும் திறனையும் கொண்டுள்ளன.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக.** *[HY-2019; Mar-2020]*

விடை : (i) தொழில் நிதியியலுக்கு ஆர்.சி ஆஸ்போர்ன் கீழ்கண்டவாறு வரைவிலக்கணம் தருகிறார். "நிதியியல் செயல்பாடு என்பது, ஒரு வணிக நிறுவனம் நிதியினைத் திரட்டி, அதை முறையாகப் பயன்படுத்துவதற்கான செயலினைக் குறிப்பதாகும்".

(அல்லது)

(ii) பி.ஒ. வீலர் அவர்களின் கூற்றுப்படி "தொழில் நிதியியல் என்பது முதலீட்டுக்கான நிதியைப் பெறுவதும், அதை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுவனங்களின் ஒட்டு மொத்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பான வணிகச் செயல்பாடுகள் ஆகும்."

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 7 வியாபாரம்

## அத்தியாயம் 22 வியாபாரத்தின் வகைகள்

### பொருளடக்கம்

22.1. வியாபாரம் – பொருள்
22.2. உள்நாட்டு வியாபாராம்
22.3. பன்னாட்டு வியாபாரம்

www.surabooks.com

### பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. வெளிநாட்டில் இருந்து சரக்குகள் வாங்கப்படுவது _______ என அழைக்கப்படும்.** *[June-2019; Sep-2020]*

அ. இறக்குமதி ஆ. ஏற்றுமதி
இ. மறு ஏற்றுமதி ஈ. மீண்டும் ஏற்றுமதி

**[விடை. (அ) இறக்குமதி]**

**2. மீண்டும் ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இறக்குமதி செய்வது _______**

அ. வெளிநாட்டு வியாபாரம்
ஆ. உள்நாட்டு வியாபாரம்
இ. மறு ஏற்றுமதி வியாபாரம்
ஈ. வியாபாரம்

**[விடை. (இ) மறு ஏற்றுமதி வியாபாரம்]**

**3. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது**

அ. வியாபாரம் ஆ. தொழிற்சாலை
இ. வணிகம் ஈ. வர்த்தகம்

**[விடை. (அ) வியாபாரம்]**

**4. உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் _______**

அ. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது
ஆ. அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது.
இ. தேசிய வருமானத்தை உயர்த்துவது
ஈ. அனைத்துப் பொருட்களையும் கிடைக்கச் செய்தல்

**[விடை. (ஆ) அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது.]**

**5. உள்நாட்டு வியாபாரத்தை _______ வகைகளாகப் பிரிக்கலாம்.** *[Mar-2019]*

அ. மூன்று ஆ. நான்கு
இ. இரண்டு ஈ. ஐந்து

**[விடை. (இ) இரண்டு]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. வியாபாரத்தின் பொருள் யாது?**

விடை : இலாபம் ஈட்டும் நோக்கில் பொருட்களையும் சேவைகளையும் **வாங்கி விற்பது** மற்றும் **பரிமாற்றம் செய்வது** வியாபாரம் ஆகும். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இறுதி நுகர்வோரை சென்றடைய வியாபாரம் உதவுகிறது. வியாபாரம் **ஆள்சார் தடையை நீக்குகிறது.**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அத்தியாயம் 23 வழங்கல் வழிகள்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 23.1. | வழங்கல் வழி – பொருள் |
| 23.2. | வழங்கல் வழிகளின் வகைகள் |
| 23.3. | வழங்கல் வழியைத் தீர்மானிக்கும் காரணிகள் |
| 23.4. | இடைநிலையர்கள் |
| 23.5. | வணிக முகவர்கள் |
| 23.6. | வியாபார இடைநிலையர்கள் |
| 23.7. | மொத்த வியாபாரம் |
| 23.8. | சில்லறை வியாபாரம் – பொருள் |
| 23.9. | மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் |


## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கும் இணைப்புச் சங்கிலியாகச் செயல்படும் வணிக இடை நிலையர்______ ஆவார்.**

அ. உற்பத்தியாளர் ஆ. தரகர்
இ. சில்லறை வியாபாரி ஈ. வாடிக்கையாளர்

**[விடை. (இ) சில்லறை வியாபாரி]**

**2. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?**

அ. மொத்த வியாபாரி ஆ. உற்பத்தியாளர்
இ. சில்லறை வியாபாரி ஈ. வாடிக்கையாளர்கள்

**[விடை. (அ) மொத்த வியாபாரி]**

**3. உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர்______** *[Mar-2020]*

அ. உற்பத்தியாளர் ஆ. மொத்த வியாபாரி
இ. சில்லறை வியாபாரி ஈ. நுகர்வோர்கள்

**[விடை. (ஆ) மொத்த வியாபாரி]**

**4. வாங்குபவரையும் விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்வர் ______.**

அ. தரகர்
ஆ. கழிவு முகவர்
இ. விற்பனை முகவர்
ஈ. இருப்பு வைத்திருப்பவர்

**[விடை. (அ) தரகர்]**

**5. வியாபார இடைநிலையர்களை _____ வகைகளாகப் பிரிக்கலாம்.** *[BEQ; HY-2018; Mar-2020]*

அ. மூன்று ஆ. இரண்டு
இ. ஐந்து ஈ. நான்கு

**[விடை. (ஆ) இரண்டு]**

**6. மொத்த வியாபாரிகள் _____ பொருள்களை வாங்கி விற்பர்.** *[June-2019]*

அ. சிறிய அளவில்
ஆ. பெரிய அளவில்
இ. நடுத்தர அளவில்
ஈ. வரையறுக்கப்பட்ட அளவில்

**[விடை. (ஆ) பெரிய அளவில்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 8 பன்னாட்டு வணிகம்

## அத்தியாயம் 25 பன்னாட்டு வணிகம்

### பொருளடக்கம்

25.1. பன்னாட்டு வணிகத்தின் தன்மை
25.2. பன்னாட்டு வணிகத்தின் கருத்து, பொருள் மற்றும் வரைவிலக்கணம்
25.3. பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள்
25.4. பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக் கூறுகள்
25.5. பன்னாட்டு வணிகத்தின் முக்கியத்துவம்
25.6. உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்
25.7. பன்னாட்டு வணிகத்தின் வகைகள்
25.8. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும்

### பயிற்சி

**I. சரியான விடையைத் தெரிவு செய்க**

**1. நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில்நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம்பெயருவது.**

அ. பன்னாட்டு வியாபாரம்
ஆ. பன்னாட்டு வணிகம்
இ. மறு ஏற்றுமதி வியாபாரம்
ஈ. உள்நாட்டு வியாபாரம்

**[விடை. (ஆ) பன்னாட்டு வணிகம்]**

**2. சரக்கு இறக்குமதி செய்யப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ...................... எனப்படும்.** *[June-2019; Mar-2020]*

அ. இறக்குமதி ஆ. ஏற்றுமதி
இ. மறு ஏற்றுமதி வியாபாரம்
ஈ. பன்னாட்டு வியாபாரம்

**[விடை. (இ) மறு ஏற்றுமதி வியாபாரம்]**

**3. நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக்கொள்ளப்பட்டால் அது ...................... எனப்படும்.**

அ. பன்னாட்டு வியாபாரம் *[BEQ; HY-2018]*
ஆ. பன்னாட்டு வணிகம்
இ. மறு ஏற்றுமதி வியாபாரம்
ஈ. உள்நாட்டு வியாபாரம்

**[விடை. (அ) பன்னாட்டு வியாபாரம்]**

**4. உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது ............... எனப்படும்.**

அ. உள்நாட்டு வியாபாரம்
ஆ. ஏற்றுமதி
இ. அயல்நாட்டு வியாபாரம்
ஈ. இணைவினை

**[விடை. (ஆ) ஏற்றுமதி]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## II. குறுவிடை வினாக்கள்

**1. பன்னாட்டு வணிகம் என்பதன் பொருள் யாது?** *[BEQ; HY-2018]*

விடை : (i) பன்னாட்டு வணிகம் என்பது நாடுகளின் **புவியியல் எல்லைகளைக் கடந்து நடைபெறும்** அனைத்து வணிக நடவடிக்கைகளையும் குறிக்கும்.

(ii) இது சரக்கு மற்றும் சேவைகளின் பரிமாற்றம் மட்டுமல்லாமல் மூலதனம், பணியாளர்கள், தொழில்நுட்பம், காப்புரிமை, வணிகக் குறி, அறிவுசார் உரிமை மற்றும் பதிப்புரிமைகளை உள்ளடக்கியது.

**2. ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?** *[June-2019; HY-2019]*

விடை : ஏற்றுமதி வியாபாரம் என்பது உள்நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளை அயல்நாட்டிற்கு விற்பனை செய்வதாகும்.

**3. இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?**

விடை : இறக்குமதி வியாபாரம் என்பது அயல் நாட்டிலிருந்து பொருட்களை வாங்கி உள்நாட்டிற்கு கொண்டு வருவதாகும்.

**4. மறு ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?**

விடை : (i) ஒரு நாட்டில் உள்ள ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால் அது மறு ஏற்றுமதி வணிகம் எனப்படும்.

(ii) எடுத்துக்காட்டாக இந்திய வியாபார நிறுவனம் ஈரான் நாட்டிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து அதை சுத்திகரித்து நேபாள நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது மறு ஏற்றுமதி வணிகம் ஆகும்.

**5. பன்னாட்டு வணிகத்திற்கான இரண்டு காரணங்களைக் கூறுக.**

விடை : (i) உபரியான வளங்களைக் கொண்டுள்ள நாடுகள் அந்த வளங்களை பற்றாக்குறையாக உள்ள நாடுகளுக்கு கொண்டு செல்வதற்கு பன்னாட்டு வணிகம் அவசியமாகிறது.

(ii) வளர்ந்த நாடுகள் மேம்பட்ட தொழில் நுட்பத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளை குறைவான விலைக்கு உற்பத்தி செய்கின்றன. வளரும் மற்றும் பின்தங்கிய நாடுகளினால் அவ்வாறு உற்பத்தி செய்ய முடிவதில்லை. இதன் காரணமாக அயல் நாட்டு வணிகம் அவசியமாகிறது.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுமதி வணிகத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.**

விடை : (i) **வளங்களின் சமமற்ற பகிர்வு :**

1. உலக நாடுகள் அனைத்தும், எல்லா இயற்கை வளங்களையும் சமமாகவோ அல்லது சமனற்ற முறையிலோ பெற்றிருக்கின்றன.
2. அனைத்து நாடுகளிலும் இயற்கை வளங்கள் சமமான அளவில் அல்லது சீராக அமையப்பெறவில்லை.
3. இதன் காரணமாக இயற்கை வளங்களை உபரியாக கொண்டுள்ள நாடுகள் தங்கள் நாட்டில் கிடைக்காத பற்றாக்குறையான வளங்களை வேறு நாடுகளோடு பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டியதாகிறது.

(ii) **உற்பத்திக் காரணிகளின் சீரற்ற கிடைப்புத்தன்மை:**

நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகளின் (நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் நுட்பம்) கிடைப்புத்தன்மை சீரற்ற முறையில் அமைந்துள்ளது. பன்னாட்டு வணிகம் ஒரு நாட்டில் கூடுதலாக உள்ள உற்பத்திக் காரணியைத் தேவையுள்ள மற்ற நாட்டிற்கு மாற்றுவதற்கு பன்னாட்டு வணிகம் வழிவகுக்கிறது.

(iii) **சிறப்புத் தேர்ச்சி :**

சில நாடுகள் அல்லது குறிப்பிட்ட நாட்டின் சில பகுதிகள், திறமையான உழைப்பாளிகள், சாதகமான பருவ நிலை, இயற்கை வளங்களின் கிடைப்புத்தன்மை, மற்றும் தொழில் நுட்ப அறிவு போன்ற காரணிகளால் சில பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன.

**2. மறு ஏற்றுமதி வியாபாரத்தின் தேவை என்ன?**

விடை : பின்வரும் சூழ்நிலைகளில் மறு ஏற்றுமதி வணிகம் தேவையாகிறது.

(i) ஒரு நாடு பொருட்களை இறக்குமதி செய்யும் நாட்டோடு எந்தவித நேரடி வணிகத் தொடர்பும் இல்லாதபோது,

(ii) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கு முன்னர் அதில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டி இருந்தாலும் அல்லது முடிவுப் பொருளாக மாற்ற வேண்டி இருந்தாலும் மற்றும் அந்த வசதிகள் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யும் நாடுகளில் இல்லாமலிருந்தால்,

(iii) இரண்டு நாடுகளிக்கிடையே வணிக ஒப்பந்தங்கள் ஏதும் இல்லாமலிருந்தால், மற்றும்

(iv) ஏற்றுமதியாளருக்கும் மற்றும் இறக்குமதியாளருக்கும் இடையே சரியான பொருளாதார உறவு இல்லாமலிருந்தால், மறு ஏற்றுமதி வியாபாரம் தேவையாகிறது.

**3. பன்னாட்டு வணிகத்தின் வரையறைகள் யாவை?** *[BEQ] [Mar-2020]*

விடை : (i) ரோஜர் பென்னட் கூற்றுப்படி, "நாட்டின் எல்லைகளை கடந்து நடைபெறும் அனைத்து வணிக நடவடிக்கைகளே பன்னாட்டு வணிகம் ஆகும்".

(ii) ஜான்டி டேனியல் மற்றும் லீ எச்ரேடெப் அவர்களின் கூற்றுப்படி, "பன்னாட்டு வணிகம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் நடைபெறும் வணிக நடவடிக்கைகள் ஆகும்".

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## IV. பெருவிடை வினாக்கள்

**1. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை?**

*[BEQ; Sep-2020]*

**விடை : (i) நிலவியல் சிறப்புத் தேர்ச்சி :**

1. உலக நாடுகள் அனைத்தும் தாங்கள் கொண்டுள்ள இயற்கை வளங்கள், மனித ஆற்றல், தொழில் நுட்பம், மூலதனம் ஆகியவை அடிப்படையில் வேறுபடுகின்றன.
2. சில நாடுகள் கனிம வளங்கள் அதிகம் கொண்டவையாகவும் பிற வளங்கள் குறைவாகக் கொண்டவையாகவும் உள்ளன.
3. சில நாடுகள் உற்பத்தி, தொழில் நுட்பம், மூலதனக் கருவிகள், திறமையான மனித உழைப்பு அதிகம் கொண்டவையாகவும் பிற வளங்கள் குறைவாகக் கொண்டவையாகவும் உள்ளன.
4. உலக நாடுகள் ஒவ்வொன்றும் மக்களின் தேவைக்காகத் தன்னிடம் உபரியாக உள்ள வளங்களைக் கொடுத்து, பற்றாக்குறையான வளங்களை பிற நாடுகளிலிருந்தும் பெற்றுக்கொள்வதற்குப் பன்னாட்டு வணிகம் தேவையாகிறது.

**(ii) இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்:**

1. பன்னாட்டு வணிகம் ஒவ்வொரு நாடும் இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு உதவி செய்கிறது.
2. ஒவ்வொரு நாடும் தனது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி அதிகம் பொருட்களை உற்பத்தி செய்ய முயல்கிறது.
3. அதிக உற்பத்தி செய்ய முடியாத நாடுகளோடு, பரிமாறிக் கொள்ள பன்னாட்டு வணிகம் உதவி செய்கிறது.

**(iii) பொருளாதார வளர்ச்சி :**

1. வளரும் நாடுகளான சீனா, இந்தியா, பிரேசில், தென்கொரியா போன்ற நாடுகள் இயந்திரம், தொழில்நுட்பம், கருவிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதன் வாயிலாக விரைவான பொருளாதார வளர்ச்சி அடைவதற்குப் பன்னாட்டு வணிகம் உதவுகிறது.
2. வளர்ந்த நாடுகளாகிய, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் கூட மூலப்பொருட்களை இறக்குமதி செய்து முடிவுற்ற பொருட்களாக ஏற்றுமதி செய்து விரைவான பொருளாதார வளர்ச்சி அடைவதற்குப் பன்னாட்டு வணிகம் உதவுகிறது.

**(iv) வேலைவாய்ப்பை உருவாக்குதல் :**

பன்னாட்டு வணிகம் வேளாண்மை மற்றும் தொழில் துறையை வளர்ச்சி மற்றும் விரிவடையச் செய்வதன் மூலம் நேரடி வேலை வாய்ப்பையும், மறைமுக வேலை வாய்ப்பையும் உருவாக்குகிறது.

**(v) வாழ்க்கைத் தரம் மேம்படுத்தல் :**

உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பல்வேறுப் பொருட்களை பிற நாடுகளில் வாங்கும் சரக்கு, சேவைப் பரிமாற்றம் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட உதவுகிறது.

**(vi) பன்னாட்டு அமைதி :**

1. உலக நாடுகள் தனித்தனியே இயங்கினாலும் பன்னாட்டு வணிகம் ஒவ்வொரு நாடும் பிறநாட்டைச் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது.
2. தனியே இயங்கினாலும் பன்னாட்டு வணிகம் ஒவ்வொரு நாடும் பிறநாட்டைச் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது.
3. கலாச்சாரம், பண்பாடு, சமூக உறவு, பரஸ்பர புரிந்துணர்வு போன்றவைகளை வளர்ப்பதன் மூலம் ஒட்டு மொத்த உலக அமைதிக்கு உதவுகிறது.

**2. பன்னாட்டு வணிகத்தின் குறைபாடுகள் யாவை?**

*[June-2019]*

**விடை : (i) பொருளாதார சார்பு :** பன்னாட்டு வணிகம் ஒரு நாடு இறக்குமதிக்காக மற்ற நாடுகளை அதிகம் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதனால் இறக்குமதி செய்யும் நாடு தானாகவே ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கு அடிமையாகும் சூழல் ஏற்படுகிறது.

**(ii) உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சி பாதிப்பு :** பன்னாட்டு வணிகம் உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. அயல் நாட்டு நிறுவனங்கள் உள்நாட்டில் சந்தையைக் கைப்பற்றும் நயவஞ்சக நோக்குடன் தங்கள் பொருட்களை உற்பத்தி விலைக்கும் குறைவாகவே விற்கின்றன. மேலும் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் அயல்நாட்டு நிறுவனங்களின் கடுமையான போட்டியும் உள்நாட்டுத் தொழில்களை முற்றிலும் அழிக்கக்கூடும்.

**(iii) ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல் :** பன்னாட்டு வணிகம் ஆடம்பரப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களை அதிகம் இறக்குமதி செய்ய வழிவகுக்கிறது. இது மக்கள் நலனைப் பாதிக்கிறது.

**(iv) இயற்கை வளங்களை தவறாகப் பயன்படுத்துதல்:** அரிய இயற்கை வளங்களை அதிகமாக ஏற்றுமதி செய்வதன் மூலம் அவை வெகு விரைவாக வெறுமையாகி விடுகின்றன. இதனால் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டில் சுற்றுச்சூழல் பேரழிவு ஏற்படுகிறது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 9 இந்திய ஒப்பந்தச் சட்டம்

## அத்தியாயம் 29 ஒப்பந்தத்தின் கூறுகள்

### பொருளடக்கம்

29.1. அறிமுகம்
29.2. சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தத்தின் இன்றியமையாத கூறுகள்
29.3. ஒப்பந்தங்களின் வகைகள்

### பயிற்சி

#### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை**

அ. நிறைவேற்றக்கூடிய ஏற்பு *[BEQ; HY-2019; Mar-2020]*
ஆ. ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
இ. ஒப்புக்கொண்ட வாக்குறுதி
ஈ. ஒப்பந்தம் **[விடை. (ஈ) ஒப்பந்தம்]**

**2. ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் தொகுதியும்.** *[Sep-2020]*

அ. உடன்பாடு ஆ. ஒப்பந்தம்
இ. முனைவு ஈ. ஏற்பு
**[விடை. (அ) உடன்பாடு]**

**3. செல்லாத ஒப்பந்தம் குறிப்பது** *[BEQ]*

அ. சட்டத்துக்கு முரணான ஒப்பந்தத்தின் இயல்பு
ஆ. சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு
இ. சட்ட நடைமுறைகளை மீறுவதான ஒப்பந்தம்
ஈ. பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடு.
**[விடை. (ஆ) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு]**

**4. செல்லுபடியாகக் கூடிய ஏற்பு**

அ. அறுதியிட்டுக் கூறுதல்
ஆ. தகுதியற்றது
இ. அறுதியிட்டுக் கூறுதல் மற்றும் தகுதியற்றது
ஈ. நிபந்தனையுடையது.
**[விடை. (இ) அறுதியிட்டுக் கூறுதல் மற்றும் தகுதியற்றது]**

**5. இளவருடன் செய்யும் ஒப்பந்தம்** *[June-2019; Sep-2020]*

அ. செல்தகு ஒப்பந்தம்
ஆ. செல்லாத ஒப்பந்தம்
இ. தவிர்தகு ஒப்பந்தம்
ஈ. மற்றொரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில்
**[விடை. (ஆ) செல்லாத ஒப்பந்தம்]**

#### II. குறுவிடை வினாக்கள்

**1. சட்டம் என்றால் என்ன?** *[BEQ]*

விடை : வாழ்க்கையில் சரியான நடத்தைக்கும், சமுதாயத்தின் முறையான ஒழுங்குமுறைக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு விதியே சட்டமாகும்.

**2. சட்டத்தை ஒருவர் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?**

விடை : (i) சமுதாயத்தில் அமைதி, ஒற்றுமை, நீதி, சமூக பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு ஆகியவற்றை சட்டத்தின் உதவியால் ஏற்படுத்த முடியும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**4. உருவாக்கம் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை?**

**விடை : (i) வெளிப்படை ஒப்பந்தம் :**

1. ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்கள், அதன் நிபந்தனைகளையும், கூறுகளையும் ஏற்றுக்கொள்வதாக வெளிப்படையாக உடன்பட்டால், அது வெளிப்படையான ஒப்பந்தம் எனப்படுகிறது.
2. ஒப்பந்தத்தை எழுத்து வடிவிலோ அல்லது வாய்மொழியாகவோ வெளிப்படுத்தலாம்.
3. வெளிப்படையான வாக்குறுதி வெளிப்படையான ஒப்பந்தத்தை ஏற்படுத்துகிறது.

**(ii) உட்கிடை ஒப்பந்தம் :**

1. எழுத்து மூலமாக இல்லாமல் ஈடுபடுபவர்களின் நடத்தை மூலமே ஏற்படும் ஒப்பந்தம் உட்கிடை ஒப்பந்தம் ஆகும்.
2. எழுத்து மூலம் முனைவோ அல்லது ஏற்போ இன்றி செய்யப்படும் ஒப்பந்தம் உட்கிடையான ஒப்பந்தமாகும்.

**(iii) போல்வு ஒப்பந்தம் :**

1. இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒப்பந்தமாகும். பொதுவாக இது ஒப்பந்தமே அல்ல.
2. ஒரு நபர் ஒருவரின் இழப்பால் மற்றொருவர் தன்னை வளப்படுத்தி கொள்ளக் கூடாது என்ற கொள்கையின் அடிப்படையிலானது வேறு வகையில் கூறினால் ஒரு தரப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க மற்றொரு தரப்பினர் இடையே ஏற்படும் தன்னிச்சையான ஒப்பந்தமாகும்.

**(iv) மறைமுக ஒப்பந்தம் :**

1. ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் நடத்தையையும் மற்றும் ஊகத்தின் அடிப்படையில் ஏற்படும் ஒப்பந்தம் மறைமுக ஒப்பந்தமாகும்.
2. எடுத்துக்காட்டு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் பணத்தைப் பெறுதல்.

**5. நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகள் யாவை?** *[Mar-2019]*

**விடை : (i) நிறைவேறிய ஒப்பந்தம் :**

1. ஒப்பந்தத்தின் மூலம் ஈடுபடும் இருநபர்கள் ஒப்பந்தப்படி அவரவர்களின் கடமையை முடிக்கும்போது அவ்வொப்பந்தம் நிறைவேறிய ஒப்பந்தமாகும்.
2. உதாரணமாக, வியாபாரி ஒருவர் ரொக்கத்திற்கு தொலைக்காட்சி ஒன்றை விற்கிறார். இதில் விற்பவர், வாங்குபவர் ஆகிய இருவரும் தங்கள் கடமையை நிறைவேற்றி உள்ளார்கள்.

**(ii) நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம் :**

1. ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள இரு நபர்களிடையே கடமைகள் நிறைவேற்றப்படாமல் இருந்தால் அவ்வொப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாகும்.
2. எடுத்துக்காட்டு A என்பவர் B என்பவருக்கு ₹20,000க்கு கட்டில் ஒன்று செய்து தர ஒப்புக்கொள்கிறார். எனினும் A இன்னும் கட்டிலைத் தயார் செய்யவில்லை என்றும் B என்பவர் அதற்கான தொகையைச் செலுத்தவில்லை என்று வைத்துக்கொள்ளுவோம். அது நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம் ஆகும்.

**(iii) ஒரு தலை ஒப்பந்தம் :**

1. இதில் ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களில் ஒருவர் மட்டுமே தனது வாக்குறுதி அல்லது கடமையை நிறைவேற்றிய பிறகு மற்றொரு நபர் தனது கடமையை நிறைவேற்றுவார்.
2. எடுத்துக்காட்டாக X என்பவர் பொருட்களை வாங்கி வருவதாக ₹10,000 Y என்பவருக்கு தருவதாக கூறுகின்றார். Y என்பவர் பொருட்களை கொண்டு வந்த பிறகே X என்பவர் பணத்தை தருகின்றார். இதில் Y பொருட்களைக் கொண்டு வரும் பொழுதே ஒப்பந்தம் உருவாகின்றது.

**(iv) இருதலை ஒப்பந்தம் :**

1. ஒப்பந்தம் ஒன்று உருவாகும் பொழுது இரு தரப்பினரும் தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டியிருப்பின், அத்தகைய ஒப்பந்தம் இரு தலை ஒப்பந்தம் எனப்படுகிறது.
2. எடுத்துக்காட்டாக R என்பவர் ₹10,00,000 மதிப்புள்ள மகிழ்வுந்தை விற்பனை செய்ய S க்கு வாக்குறுதி அளிக்கின்றார். S என்பவர் பதிலுக்கு பணம் தருவதாக வாக்குறுதி அளிக்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1 மதிப்பெண்**

**1. சட்டப்படி செல்லக் கூடிய தன்மை அடிப்படையில் இடம் பெறும் ஒப்பந்தம் எது?** *[BEQ]*

அ. செல்லாத ஒப்பந்தம்
ஆ. போல்வு ஒப்பந்தம்
இ. மறைமுக ஒப்பந்தம்
ஈ. வெளிப்படை ஒப்பந்தம்

**[விடை. (அ) செல்லாத ஒப்பந்தம்]**

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. உருவாக்க அடிப்படையில் வகைப்படுத்தப்படும் ஒப்பந்தம் எது?**

அ. முரணான ஒப்பந்தம்
ஆ. போல்வு ஒப்பந்தம்
இ. தவிர்த்த ஒப்பந்தம்
ஈ. செல்லாத ஒப்பந்தம்

**[விடை. (ஆ) போல்வு ஒப்பந்தம்]**

**3. நிறைவேற்ற அடிப்படையில் வகைப்படுத்தப்படும் ஒப்பந்தம் எது?**

அ. செல்லாத ஒப்பந்தம்
ஆ. மறைமுக ஒப்பந்தம்
இ. நிறைவேறிய ஒப்பந்தம்
ஈ. நிறைவேறா ஒப்பந்தம்

**[விடை. (இ) நிறைவேறிய ஒப்பந்தம்]**

## குறுவிடை வினாக்கள் — 2 மதிப்பெண்கள்

**1. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் இரு பகுதிகள் யாவை?**

**விடை :** இந்திய ஒப்பந்தச் சட்டம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பொது ஒப்பந்தங்கள், சிறப்பு ஒப்பந்தங்கள்.

**2. உடன்பாடுகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?**

**விடை :** உடன்பாடுகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன அவை : சட்டத்தால் நடைமுறைப் படுத்த முடியாத ஒப்பந்தம், சட்டத்தால் நடைமுறைப் படுத்தக் கூடிய ஒப்பந்தம்.

**3. ஏற்பு என்றால் என்ன?** *[BEQ]*

**விடை :** ஏற்பு 2 (b) (Acceptance) முன்மொழிதல் யாருக்கு செய்யப்பட்டதோ அவரே அதை ஏற்றுக்கொள்வதாகக் கூறியவுடன் அவ்வாறு செய்யப்பட்ட முன்மொழிதல் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**4. மறுபயன் என்றால் என்ன?**

**விடை :** போலக் என்பவரது கூற்றுப்படி, "ஒருவரின் வாக்குறுதியைப் பெற மற்றவரால் அளிக்கப்படும் விலையே மறுபயனாகும். அவ்வாறு மதிப்பைப் பெறும் பொருட்டு செய்யப்பட்ட வாக்குறுதி செயல்படுத்த கூடியதாகும்".

## சிறுவிடை வினாக்கள் — 3 மதிப்பெண்கள்

**1. இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 குறிப்பு வரைக.** *[BEQ]*

**விடை :**

(i) வணிகச் சட்டத்தின் ஒரு கிளையே இந்திய ஒப்பந்தச் சட்டமாகும். வியாபாரம் அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட ஒப்பந்தச் சட்டம் உதவியாக இருக்கின்றது.

(ii) இது வணிகர்களை மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கிறது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் தங்களின் உரிமைகளையும், கடமைகளையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

(iii) மேலும் அந்தக் கடமைகளை செய்யத் தவறிவிட்டால் பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய தீர்வுகளைக் காண உதவுகின்றது. இந்திய ஒப்பந்தச் சட்டம் நம் அனைவரையும் ஏதோ ஓர் விதத்தில் பாதிக்கிறது.

(iv) எடுத்துக்காட்டாக புத்தகம் வாங்குதல், திரைப்படம் பார்த்தல், வங்கியிடம் கடன் பெறுதல், பேருந்தில் பயணம் செய்தல் போன்ற தினசரி வாழ்வின் பல நடவடிக்கைகள் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆகும்.

(v) இந்திய ஒப்பந்தச் சட்டம் பெரும்பாலும் ஆங்கில பொது சட்டத்தின் அடிப்படையிலேயே இயற்றப்பட்டுள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 1ஆம் தேதி ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர இந்தியா முழுவதிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

(vi) இது இந்தியாவில் வணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் அனைத்து விதிகளையும் தெளிவாக வரையறுத்துள்ளது.

☆☆☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# அலகு 10 நேர்முக மற்றும் மறைமுக வரிகள்

# அத்தியாயம் 32 நேர்முக வரிகள்

## பொருளடக்கம்

32.1. வரி என்பதன் – பொருள்
32.2. வரிகளின் வகைகள்
32.3. வருமான வரி

www.surabooks.com

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. வருமான வரி என்பது** *[Mar-2019]*

அ. வியாபார வரி ஆ. நேரடி வரி
இ. மறைமுக வரி ஈ. சேவை வரி

**[விடை. (ஆ) நேரடி வரி]**

**2. கணக்கீட்டு ஆண்டு என்பது** *[BEQ; HY-2018; June-2019; Sep-2020]*

அ. ஏப்ரல் 1 முதல் மார்ச்சு 31 வரை
ஆ. மார்ச்சு 1 முதல் பிப்ரவரி 28 வரை
இ. சூலை 1 முதல் சூன் 30 வரை
ஈ. சனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

**[விடை. (அ) ஏப்ரல் 1 முதல் மார்ச்சு 31 வரை]**

**3. வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு என்பது** *[Mar-2020]*

அ. கணக்கீட்டு ஆண்டு ஆ. முந்தைய ஆண்டு
இ. ஒளி ஆண்டு ஈ. நாட்காட்டி ஆண்டு

**[விடை. (ஆ) முந்தைய ஆண்டு]**

**4. ஐந்து தலைப்புகளின் கீழ் வரும் வருமானத்தின் கூடுதல் என்பது**

அ. முழு மொத்த வருமானம்
ஆ. மொத்த வருமானம்
இ. ஊதிய வருமானம்
ஈ. வியாபார வருமானம்

**[விடை. (ஆ) மொத்த வருமானம்]**

**5. இந்தியாவில் வேளாண்மை வருமானம் என்பது**

அ. முழுவதும் வரி விதிப்பிற்குட்பட்டது.
ஆ. முழுவதும் வரி விலக்கிற்குட்பட்டது.
இ. வருமானமாக கருதப்படுவதில்லை
ஈ. மறைமுக வரி

**[விடை. (ஆ) முழுவதும் வரி விலக்கிற்குட்பட்டது.]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. வருமானவரி என்றால் என்ன?**

விடை : ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமான வரி எனப்படும். இது ஒரு நேர்முக வரி ஆகும். இவ்வரியில் வரிச் சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலாது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. முந்தைய ஆண்டு என்றால் என்ன?** *[BEQ]*

**விடை :** ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் அடுத்த ஆண்டில் வரி விதிப்பிற்கு உட்படும். **வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு முந்தைய ஆண்டு எனப்படுகிறது.** முந்தைய ஆண்டு என்பது எப்பொழுதும் ஏப்ரல் 1-ல் தொடங்கி மார்ச் 31-ல் முடியக்கூடிய வகையில் **12 மாதங்கள்** கொண்டதாக இருக்கும். மேலும் இது **நிதியாண்டு** என்றும் அழைக்கப்படும்.

**3. தனி நபர் வரையறு** *[BEQ]*

**விடை :** "நபர்" என்ற சொல்லில் பின்வருபவர்கள் அடங்குவர் தனி நபர், இந்துக்கூட்டு குடும்பம், கூட்டுப் பங்கு நிறுமம், கூட்டாண்மை நிறுவனம், பல நபர்களின் சங்கம் அல்லது தனிநபர்களின் குழுமம் (கூட்டுறவு), உள்ளாட்சி நிர்வாகம், சட்ட ரீதியான செயற்கை நபர்கள்.

**4. மதிப்பீடு செய்யப்படும் நபர் என்பவர் யார்?**

**விடை :** சட்டத்தின் கீழ் யாரால் வருமானவரி அல்லது ஏதேனும் பிற பணத்தொகை செலுத்தப்படத்தக்கதாக உள்ளதோ அந்நபர் மதிப்பீட்டிற்குரியவர் ஆவார். மேலும் தன்னுடைய வருமானம் அல்லது நட்டம் அல்லது தனக்கு வரவேண்டிய பாக்கித்தொகை ஆகியவற்றிற்காக வருமான வரிச்சட்டத்தின் கீழ் வருமானவரி மதிப்பீட்டு நடவடிக்கைக்கு உட்பட்ட ஒவ்வொரு நபரும் மதிப்பீட்டிற்குரியவர் என்ற சொல்லில் அடங்குவர்.

**5. கணக்கீட்டு ஆண்டு என்றால் என்ன?**

**விடை :** "ஏப்ரல் 1ம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் 31-ம் தேதி முடியும் காலகட்டமே மதிப்பீடு ஆண்டு எனப்படுகிறது. இதனையே **கணக்கீட்டு ஆண்டு** என்று கூறுகிறோம்."

## III. சிறுவிடை வினாக்கள்

**1. முழு மொத்த வருமானம் என்றால் என்ன ?**

**விடை :** வருமான வரிச்சட்டம் 1961ன் படி கீழ்க்காணும் ஐந்து தலைப்புகளில் வருமானங்கள் தனித்தனியாகக் கணக்கிடப்படும். இத்தலைப்புகளின் கீழ் பெறப்படும் வருமானத்தின் கூட்டுத் தொகையிலிருந்து நட்டங்கள் ஏதேனும் இருப்பின் அவை கழிக்கப்பட்டு கிடைக்கும் தொகையே முழு மொத்த வருமானம் என அழைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (i) | சம்பள வருமானம். | X X X |
| (ii) | வீட்டு சொத்திலிருந்து வருமானம். | X X X |
| (iii) | வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலின் வருமானம். | X X X |
| (iv) | மூலதன ஆதாயங்கள். | |
| (v) | ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் | X X X |
| (vi) | முழு மொத்த வருமானம் (GTI) | X X X |

**2. ஐவகை வருமானத் தலைப்புகளை வரிசைப்படுத்துக.** *[BEQ; HY-2018; Mar-2019]*

**விடை : வருமானங்களின் தலைப்புகள் (பிரிவு 14) :** வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு, 14ல் ஒரு மதிப்பீட்டிற்குரியவரின் மொத்த வருமானத்தை கணக்கிடுவதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவின் கீழ் ஒரு மதிப்பீட்டிற்குரியவரின் வருமானங்கள் ஐந்து தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்புக்கான வருமானங்கள் தனித்தனியாக கணக்கீடு செய்யப்படுகின்றன.

**ஐந்து தலைப்புகளின் வருமானங்கள் பின்வருமாறு :**

(i) சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு 15-17)

(ii) வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு 22-27)

(iii) வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலின் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28-44)

(iv) மூலதன ஆதாயங்கள் (பிரிவு 45-55)

(v) ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் (பிரிவு 56-59).

**3. வேளாண்மை வருமானம் - குறிப்பு வரைக.**

**விடை : வேளாண் வருமானம் 2(IA) :** பிரிவு 2(IA) ன் படி, விவசாயம் சார்ந்த வருமானத்தில் அடங்குவன, பின்வருமாறு

(i) இந்தியாவில் அமைந்துள்ள மற்றும் விவசாயம் சார்ந்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் நிலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வாடகை அல்லது வருவாய்.

(ii) விவசாய விளை பொருட்களைச் சந்தைக்கோ அல்லது விற்பனைக்கோ தகுந்ததாக மாற்றுவதற்கென பெறப்பட்ட ஏதேனும் கட்டணம், விவசாயம் விளைபொருட்களைப் பதனம் செய்தல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் அவ்வித நிலத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம்,

(iii) குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு பண்ணைக் கட்டடத்திலிருந்து பெறப்பட்ட வருமானம்.

(iv) நாற்றுப்பண்ணையில் வளர்க்கப்பட்ட நாற்று அல்லது இளஞ்செடி மூலம் பெறப்பட்ட வருமானம்

இந்த வேளாண் வருமானம் முழுவதும் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது மொத்த வருமானத்தில் சேர்க்கப்படாது.

**4. மொத்த வருமானம் என்பது குறித்து நீவிர் அறிவது யாது?**

**விடை : மொத்த வருமானம் :** முழு மொத்த வருமானத்திலிருந்து 80c முதல் 80U வரையிலான பிரிவுகளின் கீழ் கழிவுகளைக் கழித்தபின் கிடைக்கும் தொகையே மொத்த வருமானமாகும்.

| | |
|---|---|
| முழுமொத்த வருமானம் | X X X |
| (கழிக்க) கழிவுகள் (பிரிவு 80c முதல் 80U) | X X X |
| **மொத்த வருமானம்** | X X X |

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# 33 மறைமுக வரிகள்

## பொருளடக்கம்

33.1. மறைமுக வரி என்பதன் பொருள்
33.2. சரக்கு மற்றும் சேவை வரி – பொருள்
33.3. சரக்கு மற்றும் சேவை வரிகள் குழுமம்

## பயிற்சி

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் தலைவர் யார்?**

அ. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைவர் *[Mar-2020]*
ஆ. நிதி அமைச்சர்
இ. பிரதம மந்திரி
ஈ. இந்திய குடியரசுத் தலைவர்

**[விடை. (ஆ) நிதி அமைச்சர்]**

**2. GST யின் விரிவாக்கம்** *[June-2019]*

அ. சரக்கு மற்றும் அளிப்பு வரி
ஆ. அரசு விற்பனை வரி
இ. சரக்கு மற்றும் சேவை வரி
ஈ. பொது விற்பனை வரி

**[விடை. (இ) சரக்கு மற்றும் சேவை வரி]**

**3. சரக்கு மற்றும் சேவை வரி என்பது**

அ. நேரடி வரி
ஆ. மறைமுக வரி
இ. சரக்கு மற்றும் சேவைகளின் வகையை பொருத்தது.
ஈ. வியாபார நடவடிக்கைகளைச் சார்ந்தது.

**[விடை. (ஆ) மறைமுக வரி]**

**4. IGST என்பது** *[BEQ; Sep-2020]*

அ. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
ஆ. இந்திய சரக்கு மற்றும் சேவை வரி
இ. ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி
ஈ. மேற்கூறிய அனைத்தும்

**[விடை. (அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி]**

**5. சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்** *[BEQ; Mar-2019; HY-2019]*

அ. ஏப்ரல் 1, 2017 ஆ. சனவரி 1, 2017
இ. சூலை 1, 2017 ஈ. மார்ச்சு 1, 2017

**[விடை. (இ) சூலை 1, 2017]**

### II. குறுவிடை வினாக்கள்

**1. மறைமுகவரியின் வரைவிலக்கணம் தருக.**

விடை : **சரக்குகள் மற்றும் சேவைகளின் மீது வரிவிதிக்கப்பட்டு** விற்பனையாளரால் வாங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு பின்னர் அரசுக்கு செலுத்தப்படும் வரியே மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.

**2. இந்தியாவில் விதிக்கப்படும் மறைமுக வரிக்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**

விடை : (i) சுங்கவரி,
(ii) சரக்கு மற்றும் சேவைவரி
(iii) மதிப்புக் கூட்டு வரி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**3. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?** *[BEQ]*

**விடை :** சரக்கு மற்றும் சேவை வரி என்பது சரக்கு மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் வரி ஆகும். இது ஒரு சேருமிடம் சார்ந்து விதிக்கப்படும் ஒரு நுகர்வு வரியாகும். மற்றும் அளிப்புச் சங்கிலியின் ஒவ்வொருபடி நிலையிலும் காட்டப்பட்ட மதிப்பின் மீது வசூலிக்கப்படுகிறது.

**4. மாநில சரக்கு மற்றும் சேவை வரி பற்றிக் குறிப்பு வரைக.** *[Sep-2020]*

**விடை :** (i) இது மாநில சரக்கு சேவை வரிச்சட்டம் 2017ன் கீழ் மாநில அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

(ii) இது முன்னர் இருந்த விற்பனைவரி, ஆடம்பர வரி, நுழைவு வரி, போன்றவைகளுக்கு மாற்றாக வசூலிக்கப்படுகிறது.

(iii) இது ஒரே மாநிலத்திற்குள் அளிக்கப்படும் சரக்குகள் மீது மாநில அரசால் சுமத்தப்படுகிறது.

**5. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?** *[BEQ]*

**விடை :** (i) இது சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் 2017ன் கீழ் மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

(ii) இது முன்னர் இருந்த சேவை வரி, உள்நாட்டு வரி போன்றவைகளுக்கு மாற்றாக விதிக்கப்படுகிறது.

(iii) இது ஒரே மாநிலத்திற்குள் அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்படுகிறது.

**6. சரக்கு மற்றும் சேவை வரிகளின் வகைகள் யாவை?** *[Mar-2020]*

**விடை :** சரக்கு மற்றும் சேவை வரியானது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி, மாநில சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி என மூன்று வகைப்படும்.

## III. சிறுவிடை வினாக்கள்

**1. நேரடி வரிக்கும் மறைமுக வரிக்கும் உள்ள இரண்டு வேறுபாடுகளை எழுதுக.** *[BEQ; June-2019]*

**விடை :**

| அடிப்படை | நேர்முகவரி | மறைமுக வரி |
|---|---|---|
| (i) இயல்பு | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| (ii) ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| (iii) பணவீக்கம் | பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது | பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது, |
| (iv) வரித்தாக்கம் | ஒரே நபரை சென்றடைகிறது | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றன. |

**2. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை?**

**விடை : நோக்கங்கள் :**

(i) இந்தியாவின் சமமான வரி வீதத்தினை தோற்றுவிப்பதே சரக்கு மற்றும் சேவை வரியின் முதன்மை நோக்கமாகும் (ஓர் நாடு (தேசம்) ஓர் வரி, ஓர் சந்தை).

(ii) வரியின் விழுத்தொடராக விளைவினைத் தவிர்க்க, சரக்கு மற்றும் சேவை வரிக்கு முன் செலுத்திய வரியினை சரிகட்டிக் கொள்ள அனுமதிக்கிறது (உள்ளீட்டு வரியின் மூலம்).

(iii) ஏற்றுமதியினை ஊக்குவிக்க, வசூலிக்கப்பட்ட உள்ளீட்டு வரி திருப்பி வழங்கப்படுகிறது. எனவே ஏற்றுமதியின் மீது வரி இல்லை.

(iv) வரி அடிப்படையை அதிகரித்தே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் வரி வருவாய் அதிகரிக்கப்படுகிறது.

**3. சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் பணிகளை விளக்குக.** *[BEQ]*

**விடை :** (i) GST குழுமம் GST நடைமுறைப்படுத்துவதை பரிந்துரை செய்கிறது.

(ii) இது GST பகிர்ந்தளித்தல், வரி விலக்கு போன்றவற்றிற்குப் பரிந்துரை செய்கிறது.

(iii) CGST மற்றும் IGST சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இக்குழுமத்திடம் இல்லை.

(iv) மைய அரசு நிதியமைச்சகத்தின் மாநிலப் பொறுப்பில் உள்ள நிதி அமைச்சர்கள் மற்றும் அந்தந்த மாநிலத்தின் நிதி அமைச்சர்கள் இதன் உறுப்பினர்கள்.

(v) மைய அரசிற்கு 1/3 பங்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

(vi) மற்ற மாநிலங்களுக்கு 2/3 பங்கு வாக்களிக்கும் உரிமை உண்டு.

(vii) ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வாக்கு உண்டு.

(viii) அனைத்து முடிவுகளும் 3/4 பங்கு வாக்குகள் இருந்தால் மட்டுமே நிறைவேற்றப்படும்.

**4. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியை விளக்குக.**

**விடை :** IGST சட்டம் 2017ன் கீழ் மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**ஏற்றுமதி மீதான ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி :**

சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் அனைத்து ஏற்றுமதிகளும் மாநிலங்களுக்கிடையேயான அளிப்பாக கருதப்படுகிறது. ஏற்றுமதிகள் பூஜ்ஜியம் வீத வரி என்பதால், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து சரக்கு மற்றும் சேவைகளின் மீது சரக்கு மற்றும் சேவை வரி சுமத்தப்படுவதில்லை. ஏற்றுமதி மீது செலுத்தப்படும் அனைத்து உள்ளீட்டு வரிகளும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

**11 ஆம் வகுப்பு**

# அரசு துணைத்தேர்வு, செப்டம்பர் - 2020
## வணிகவியல் (விடைகளுடன்)

பதிவு எண் :

காலஅளவு : 3.00 மணி நேரம்] PART - III [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** இடத்தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது :
(அ) போக்குவரத்து (ஆ) பண்டகசாலை
(இ) விற்பனையாளர் (ஈ) காப்பீடு

**2.** நிறுமச் சட்டத்தின் அட்டவணை –அ (Table - A) என்பது :
(அ) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி
(ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
(இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
(ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

**3.** இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1 __________ ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது.
(அ) 1936 (ஆ) 1935 (இ) 1934 (ஈ) 1933

**4.** மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் __________ என அழைக்கப்படுகிறது.
(அ) மின்னணு வணிகம் (ஆ) இணையதளம்
(இ) வலைதளம் (ஈ) வர்த்தகம்

**5.** கூட்டாண்மை உண்டாக்கப்படுவது :
(அ) ஒப்பந்தத்தால் (ஆ) கூட்டாளிகளிடையே உறவு
(இ) அரசின் வழிகாட்டல் (ஈ) நட்பின் அடிப்படையில்

**6.** __________ வகை வணிக முகவர்கள் முதல்வரால் விற்பனைக்காக அனுப்பப்படும் பொருட்களின் உடமையைப் பெற்றிருப்பினும் உரிமையைப் பெறுவதில்லை.
(அ) தரகர்
(ஆ) தன்பொறுப்பு முகவர்
(இ) பண்டகசாலை வைத்திருப்பவர்
(ஈ) கழிவு முகவர்

**7.** ரூபே அட்டை சேவைகள் இந்தியாவில் எப்போது தொடங்கப்பட்டது?
(அ) மார்ச் 2014 (ஆ) மார்ச் 2013
(இ) மார்ச் 2010 (ஈ) மார்ச் 2012

**8.** கடன் பத்திரக்காரர்கள் ஒரு நிலையான __________ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.
(அ) பங்காதாயம் (ஆ) இலாபம்
(இ) வட்டி (ஈ) மேலூதியம்

**9.** உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள் :
(அ) 1 - 1- 1996 (ஆ) 1 - 1- 1997
(இ) 1 - 1- 1995 (ஈ) 1 - 1- 1994

**10.** IGST என்பது :
(அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
(ஆ) இந்திய சரக்கு மற்றும் சேவை வரி
(இ) ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி
(ஈ) பன்னாட்டு சரக்கு மற்றும் சேவை வரி

**11.** ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டியினை தோற்றுவித்தவர் __________.
(அ) ராபர்ட் ஓவன் (ஆ) H.C. கால்வெர்ட்
(இ) டால்மாக்கி (ஈ) லம்பேர்ட்

**12.** வெளிநாட்டிலிருந்து சரக்குகள் வாங்கப்படுவது __________ என அழைக்கப்படுகிறது.
(அ) இறக்குமதி (ஆ) ஏற்றுமதி
(இ) மறு ஏற்றுமதி (ஈ) மீண்டும் ஏற்றுமதி

**13.** பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்பு இல்லை?
(அ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்
(ஆ) இடர் ஏற்றல்
(இ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் (அ) விற்பனை
(ஈ) சம்பளம் / கூலி

**14.** சாதாரணமாக அதிக அளவு அபாயத்தைக் கொண்டது :
(அ) உற்பத்தி தொழில் (ஆ) வணிகம்
(இ) வியாபாரம் (ஈ) இவை அனைத்தும்

**15.** கணக்கீட்டு ஆண்டு என்பது :
(அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை
(ஆ) மார்ச் 1 முதல் பிப்ரவரி 28 வரை
(இ) ஜுலை 1 முதல் ஜுன் 30 வரை
(ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை

**16.** ஏற்றுமதியாளரால் சுங்க நடைமுறைகளைப் பின்பற்ற நியமிக்கப்படும் முகவர் :
(அ) அகற்றீட்டு முகவர் (ஆ) அனுப்புகை முகவர்
(இ) கழிவு முகவர் (ஈ) தன் பொறுப்பு முகவர்

**17.** சில்லறை வியாபாரிகள் __________ அளவில் பொருட்களை வைத்திருப்பர்.
(அ) சிறிய (ஆ) பெரிய
(இ) நடுத்தர (ஈ) அளவான

**18.** சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பெயர் :
(அ) செல்லத்தகு ஒப்பந்தம்
(ஆ) செல்லாத ஒப்பந்தம்
(இ) சட்டத்துக்கு முரணான ஒப்பந்தம்
(ஈ) தவிர்தகு ஒப்பந்தம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



19. பின்வருவனவற்றில் எது பொருள் அளிப்பாளர்கள் தொடர்பான பொறுப்புணர்வு அல்ல :
(அ) நியாயமான விதிமுறைகள் மற்றும் பொறுப்பு நுதிகளை வழங்குதல்.
(ஆ) கடனுக்கான காலக்கெடுவினை நியாயமான முறையில் அளித்தல்.
(இ) கடன் தொகையை தவணைக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துதல்.
(ஈ) குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்.

20. ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கம் ஒவ்வொரு உறுதிமொழியும் உறுதிமொழிகளின் தொகுதியும் __________ எனப்படும்.
(அ) உடன்பாடு (ஆ) ஒப்பந்தம்
(இ) முனைவு (ஈ) ஏற்பு

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும் . **7 × 2 = 14**

21. நாளங்காடி என்றால் என்ன?
22. கூட்டுறு சாரா நிறுவனங்கள் – பட்டியலிடுக.
23. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
24. கடன் அட்டை என்ற பதத்தினை சுருக்கமாக விளக்குக.
25. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
26. தனி உரிமையியலின் இரண்டு நன்மைகளைக் கூறுக.
27. உலக வங்கி என்பதன் பொருள் யாது?
28. மாநில சரக்கு மற்றும் சேவை வரி பற்றி குறிப்பு வரைக.
29. பொது வைப்பு என்றால் என்ன?
30. கடனீந்தோர் ஒருவர் கடனாளியின் மீது காப்பீடு எடுப்பது எந்த கோட்பாட்டின் அடிப்படையில்? விளக்குக.

## பகுதி - III

**குறிப்பு :** எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும். **7 × 3 = 21**

31. சிறு குறிப்பு வரைக :
(அ) தொழில் (ஆ) சிறப்புத் தொழில்
32. கூட்டாண்மை இலக்கணம் வரைக.
33. பண்டக காப்பாளர் இரசீதிலிருந்து பண்டக சான்றாணை வேறுபடுத்துக.
34. அரசு நிறுமம் என்றால் என்ன?
35. அடகு கடன் என்றால் என்ன?
36. உடன்படிக்கை என்றால் என்ன?
37. சிறப்பங்காடியின் சிறப்பியல்புகளை விளக்குக.
38. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.
39. அமெரிக்க வைப்பு இரசீதின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.
40. வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து என்பது எது? அதன் இரண்டு நன்மைகளை எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**7 × 5 = 35**

41. (அ) பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை?
(அல்லது)
(ஆ) கப்பல் இரசீதிற்கும், கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

42. (அ) தனியாள் வணிகத்தின் பண்புகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக.
(அல்லது)
(ஆ) சட்டப்படி செல்லக் கூடிய தன்மையின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் ஏதேனும் ஐந்து வகைகளை விளக்குக.

43. (அ) காப்பீட்டின் கோட்பாடுகள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.
(அல்லது)
(ஆ) வணிக முகவர்களின் வகைள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.

44. (அ) கூட்டாளியின் வகைகள் யாவை? எவையேனும் ஐந்து கூட்டாளிகளின் வகைகளை விளக்குக.
(அல்லது)
(ஆ) சிறு குறிப்பு வரைக.
(i) மாற்றுச்சீட்டுகளை தள்ளுபடி செய்தல்
(ii) மாற்றுச்சீட்டில் மேலெழுதல்

45. (அ) பிடிப்பு, துணை நிறுமங்கள் பற்றி விளக்குக.
(அல்லது)
(ஆ) குறிப்பு வரைக :
(i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்
(ii) குத்தகை நிதி

46. (அ) பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.
(அல்லது)
(ஆ) உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து என்றால் என்ன? அவற்றின் நன்மைகளை எழுதுக.

47. (அ) சமூகப் பொறுப்புணர்வுக்கு எதிரான விவாதங்கள் யாவை?
(அல்லது)
(ஆ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களைத் தெளிவுபடுத்துக.

★★★

# விடைகள்

## பகுதி - I

1. (அ) போக்குவரத்து
2. (இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
3. (ஆ) 1935
4. (அ) மின்னணு வணிகம்
5. (அ) ஒப்பந்தத்தால்
6. (ஆ) தன்பொறுப்பு முகவர்
7. (ஈ) மார்ச் 2012
8. (இ) வட்டி
9. (இ) 1-1-1995
10. (அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
11. (அ) ராபர்ட் ஓவன்
12. (அ) இறக்குமதி
13. (ஈ) சம்பளம் / கூலி
14. (அ) உற்பத்தி தொழில்
15. (அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை
16. (ஆ) அனுப்புகை முகவர்

www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



வேண்டிய, கண்ணாடியால் செய்யப்பட்ட பொருட்கள், மண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் போன்ற பலவீனமான பொருட்களை கொண்டு செல்ல மிகவும் பொருத்தமானது.

3. இது கனரக சுமைகளுக்கு மிகவும் பொருத்தமானது.
4. நீர் போக்குவரத்துகளில் குறைந்தளவே மாசு உள்ளது.
5. ஆற்றின் சேவைகள் மற்றும் முதலீட்டின் ஆரம்ப முதலீடு மற்றும் சாலை பராமரிப்பு மற்றும் இரயில் போக்குவரத்து ஆகியவற்றோடு ஒப்பிடும் போது செலவுகள் குறைவாகவே உள்ளது.

**47. அ) (i) கருத்து தெளிவின்மை :**

1. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருள் தெளிவாக வரையறுக்கப்படாமல் உள்ளது.
2. இத்தகைய சூழ்நிலையில் சமூகப் பொறுப்புணர்வு கோட்பாட்டை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகிறது.

**(ii) பொருளாதார இலக்குகளை தளர்த்தல் :**

1. சமூகப் பொறுப்புணர்வை ஏற்றுகொள்வதன் மூலம், வணிகப் பொருளாதார இலக்குகளையும் சமரசம் செய்கின்றன.
2. தொழில் என்பது ஒரு பொருளாதாரம் சார்ந்த நிறுவனமாகும். மேலும் அதன் உரிமையாளர்களுக்கு அதிகபட்ச இலாபம் ஈட்டுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

**(iii) சமூகத்திறன் இன்மை :**

1. தொழில் அமைப்புகள் மற்றும் அதன் மேலாளர்கள் சமூகம் சார்ந்த கடமைகளைப் பற்றி நன்கு அறிவதில்லை.
2. இதனால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம் போன்ற சிறப்பு சமூக சேவை நிறுவனங்கள், சமூகப் பிரச்சனைகளை அல்லது சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

**(iv) நுகர்வோர் மீதான சுமை :**

1. தொழில் அமைப்புகள் சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் ஈடுபடுகின்றபோது, அதற்கான செலவு அதிகரிக்கின்றது.
2. அத்தகைய செலவினங்களை ஈடுகட்ட தொழில் நிறுவனங்கள் பொருளின் விலையை உயர்த்தி அந்தச் சுமையை நுகர்வோர்களுக்கு மாற்றிவிடுகின்றன.

**(v) அதிகாரமற்ற பொறுப்பு :**

1. தொழில் அமைப்புகள் பொருளாதாரம் சார்ந்த அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது.
2. ஆனால், அது சமூகம் சார்ந்த அதிகாரங்கள் கொண்டவை அல்ல. சமூக அதிகாரத்தை சமூகப் பொறுப்புணர்வுடன் திணிப்பது ஓர் நியாயமற்றதாகும்.

**(vi) பொறுப்புகளை தவறாக பயன்படுத்துதல்:**

1. சமூகப் பொறுப்புக்களை ஏற்பதன் மூலம், நிறுமத்தின் திட்டங்களை நிறைவேற்றும் நேரம் மற்றும் வளங்கள் குறைகின்றன.
2. இதனால் தொழில் அமைப்புகள் மேலும் நலிவடைய வாய்ப்பு உள்ளது.

**(vii) அளவுகோல் இன்மை :**

1. வணிகத்தில் எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு இலாபம் ஒரு பொதுவான அளவுகோலாக விளங்குகிறது.
2. வியாபார அமைப்புகளின் மீது சமுதாய பொறுப்பை திணிப்பதன் மூலம் வியாபார முடிவு எடுக்கும் துல்லியமாக இலாபம் என்ற பொது அளவுகோலால் சரியாக அளக்க முடிவதில்லை.

**(அல்லது)**

ஆ) (i) **கடன் ஏடுகளைப் பராமரித்தல் :** தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழுப் பொறுப்பினை தனி உரிமை பேராளன் ஏற்றுக் கொள்கிறார்.

(ii) **கடன் எல்லைகளை நிர்வகித்தல் :** வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையைத் தனி உரிமைப் பேராளன் ஏற்றுக்கொள்கிறார். இதனால் வணிகத்தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக் கவனம் செலுத்துகிறார்.

(iii) **ரொக்க முன்பணம் :** ஏறத்தாழ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 விழுக்காடு முன்கூட்டியே வணிகர் பெற்று வருகிறார். இதனால் தன்னுடைய வியாபார நீர்மைத் தன்மை பாதிக்கப்படுகிறது.

(iv) **வசூல் சேவை :** வாடிக்கையாளர்களுக்கு நினைவு கூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த நிதிச் சேவையில் அடங்கும்.

(v) **தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்:** தனி உரிமை பேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபார செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

★★★

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000